மார்ச் 2024 March | இதழ் 398 Issue



# தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal

## 6.5 மில்லியன் கனடியர்களுக்கு குடும்ப மருத்துவர் இல்லை

## கனடாவில் ஒரு வருடத்தில் 90,000 கார்கள் களவாடப்பட்டன

## கனடாவில் ஆண்கள் தொகை பெண்களைவிட அதிகரிக்கிறது

## தமிழர் தகவல் 33வது ஆண்டு விருது விழா ஏப்ரல் 28 ஞாயிறு



டாக்டர் இந்திரகிருஷ்ணனுக்கு ஜோர்ஜியா அரச மதிப்பளிப்பு



ஸ்காபரோ ஜெய்சிறீ சீரடி சாய்பாபா மகிமைப் பெருவிழா

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

34வது ஆண்டில் 34th Year

Growing with the Community ESTD-1991

ஆசிரியரிடமிருந்து... *From the Editor*

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிராஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

# மருத்துவ எச்சரிக்கை!

ஒன்ராறியோ மாகாணத்தில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக குடும்ப மருத்துவராக பணியாற்றி வருபவர் டாக்டர் பீட்டர் பெற்றோசொனியாக். இவருக்கு இப்போது 74 வயது. அடுத்த வருடம் ஓய்வுபெற விரும்புகிறார். ஆனால் முடியவில்லை.

ரொறன்ரோவின் சிரிவி தொலைக்காட்சி கடந்த மாதம் இவர் வழங்கிய செவ்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பியது.

"அநேகமான கனடியர்கள் அறுபது வயதில் ஓய்வு பெறுகிறார்கள். நான் 72 வயதாகும்போது ஓய்வுபெற விரும்பியும் முடியவில்லை. அடுத்த வருடம் 75 வயதில் ஓய்வுபெற விரும்புகிறேன். ஆனால், எனது கண்காணிப்பிலுள்ள சுமார் 2,000 நோயாளிகளுக்கு இன்னொரு குடும்ப மருத்துவரை கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் ஓய்வுபெற இயலாதுள்ளேன்" என்ற உண்மையை இவர் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

தனது நோயாளர்களை மருத்துவரின்றி அநாதைகளாக விட்டுச் செல்ல தாம் விரும்பவில்லையென்று தமது மனதைத் தொட்டு அவர் கூறியுள்ளார். இந்த நெருக்கடியால் தாம் மனஅழுத்தத்துடன் களைத்துப் போயுள்ளதாகவும் கூறியுள்ளார்.

கனடாவில் தற்போது சுமார் 6.5 மில்லியன் மக்கள் குடும்ப மருத்துவரின்றி இருக்கின்றனர் என்ற புள்ளிவிபரத்தின் யதார்த்தத்தை இந்த டாக்டரின் கூற்று பதிவு செய்துள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் 2.2 மில்லியன் வரையான மக்கள் குடும்ப மருத்துவரின்றி உள்ளனர் என்றும் 2026ம் ஆண்டில் சுமார் 4 மில்லியன் மக்கள் குடும்ப மருத்துவரின்றி இருப்பார்களென்றும் ஒன்ராறியோ மருத்துவர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கனடாவின் 1.7 மில்லியன் ஆட்களை 65 வயதைத் தாண்டிய முதிய மருத்துவர்களே பராமரிக்கின்றார்கள் என்ற தகவலும் வெளிவந்துள்ளது. முதுமை நிலையில் தங்களால் தொடர்ந்து பணியாற்ற முடியாதிருப்பதை இவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

அவசர சிகிச்சைப் பிரிவுகளில் பல மணித்தியாலங்கள் காத்திருக்கும் பரிதாபம், மருத்துவர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தாதிகளின் தட்டுப்பாடு, சத்திரசிகிச்சைக்கு பல வாரங்கள் அல்லது மாதங்கள் பொறுத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கியம் என்பவை கனடியர்கள் இன்று எதிர்கொள்ளும் சிகிச்சை நெருக்கடிகள்.

மறுபுறத்தில் குடும்ப மருத்துவ கல்வியை கற்பவர்களின் எண்ணிக்கை முதன்முறையாக கடந்த பதினைந்து வருடங்களில் இப்போது குறைந்து - ள்ளது என்ற தகவல் எதிர்காலம் பற்றிய அச்சத்தைத் தருகிறது.

கனடாவில் மனிதர் வாழும் காலம் அதிகரித்துச் செல்வதையிட்டு திருப்தியடையும் கனடிய அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும், நோயற்ற சமூகத்தை உருவாக்குவது பற்றி சிந்தித்து செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**திரு எஸ். திருச்செல்வம்**

TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

E-mail
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Public Relation
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website
www.tamilsinformation.info

# கனடாவில் ஒரு வருடத்தில் 90,000 கார்கள் களவு

வருடமொன்றுக்கு கனடாவில் 90,000 கார்கள் களவாடப்படுவதாக கனடிய அரசு தெரிவித்துள்ளது. இதனால் கனடிய அரசியலில் முக்கிய பிரச்ச - னைக்குரியதாக இது மாறியுள்ளது. இதனை ஒரு தேசியப் பிரச்சனையாக முன்னெடுத்து பல அரசியற்கட்சிகளும் இணைந்து கடந்த மாதம் ஒரு மாநாடு நடத்தின. எதிர்க்கட்சியான கொன்சர் - வேடிவ் கார் களவுகளை தடுப்பதற்கான முக்கிய ஆலோசனைகளை இங்கு முன்வைத்தது. கார் களவை நிறுத்தும் பணிக்கென 28 மில்லியன் டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிகமான கார் களவுகள் ஒன்ராறியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலேயே இடம்பெற்றுள்ளன. களவாடப்படும் கார்களை கப்பல்கள் மூலம் வெளி - நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பிரதான துறைமுகமாக கியுபெக்கின் மொன்றியல் இயங்கி வருகிறது.

ஒரே நாளில் இங்கிருந்து 53 கார்கள் பொலிசாரால் மீட்கப்பட்டன. 26 பாரிய பெட்டிகளில் இவைகள் வைக்கப்பட்டி - ருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இக்களவுகளுடன் சம்பந்தப்பட்டவர் - களென சுமார் நூறுக்கும் அதிகமான - வர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குழுக்களாக செயற்படும் அணிகளில் பெண்கள் உட்பட இளையோர் பலர் இயங்கி வருகின்றனர். கைது செய்யப்பட்டவர் - களில் தமிழர்கள் சிலரும் அடங்குவர்.

ஒன்ராறியோ மாகாணத்தில் ரொறன்ரோ பெரும்பாகத்திலேயே கூடுதலான கார்கள் களவாடப்பட்டுள்ளன. மார்க்கம் மற்றும் வோன் நகரங்களில் அநேகமாக தினசரி இரவு வேளைகளில் கார் களவு இடம்பெற்றுள்ளது.

2021-2023ம் ஆண்டுப் பகுதிகளில் ஒன்ராறியோ மாகாணத்தில் 48.2 வீத - மும் கியுபெக் மாகாணத்தில் 57.9 வீத - மும் கார் களவு அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய குடிவரவாளர்களால் கனடாவில் ஆண்களின் எண்ணிக்கை பெண்களைவிட அதிகரித்துள்ளது

## Canada's male population surges

கனடாவில் புதிய குடிவரவாளர் எண்ணிக்கை அதிகரிப்பினால் ஆண்களின் தொகை முதன்முறையாக பெண்களைவிட அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக இருந்து வந்த பாலின விகிதம் முதன்முறையாக மாற்றம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அண்மைய பகுப்பாய்வு ஒன்றின்படி ஆண்களின் தொகை கடந்த ஆண்டில் 3.4 சதவீதத்தி - னால் அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் பெண்கள் 2.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளனர். 25 - 44 வயதுக்குட்பட்டவர்களில் இந்த இடைவெளி மிகவும் பெரியது. இதில் ஆண்கள் 4.8 சதவீதமும், பெண்கள் 3.9 சதவீதமும் அதிகரித்துள்ளனர். இந்த வருட முதல் மாத நிலைவரப்படி வயது அடிப்படையில் 141,000 ஆண்கள் அதிகமாகவுள்ளனர்.

வயதான மக்கள் தொகையிலிருந்து நீண்டகால பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்க பெருமள - வான தொழிலாளர்களை விரைவாகக் கனடாவில் குடியேற அனுமதித்த கனடாவின் தாராள வாத குடியேற்றக் கொள்கையின் காரணமாகவே மக்கள் தொகையில் பாலின எண்ணிக்கை மாறி வருவதாக புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த தசாப்தத்தில் ஆண்கள் தொகை வேகமாக வளர்ந்ததால் கடந்த ஆண்டில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான இடைவெளி முப்பது ஆண்டுகளுக்கும் மேலான மாற்றத்தைக் காட்டியுள்ளது.

கனடாவின் மக்கள் தொகை வளர்ச்சி இதன் ஒரு வருட காலப்பகுதியில் 3.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது சீனா அல்லது இந்தியாவைவிட வேகமாக உள்ளதென மதிப்பிடப் - பட்டுள்ளது. சர்வதேச இடப்பெயர்வுகள் காரணமாகவும், அகதிகள் வருகையாலும், வெளிநாட்டு மாணவர் மற்றும் தொழிலாளர்களை உள்வாங்குவதாலும் மக்கள் தொகை - யிலும் ஆண்கள் அதிகரிப்பிலும் மாற்றம் ஏற்படுவதாக பொருளாதார நிபுணர் டக் போர்ட்டர் தயாரித்த அறிக்கை சுட்டுகிறது.

“தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் பொருளாதார தேவைகளைக் கையாளுவதில் கனடா முக்கியத்துவம் செலுத்துகிறது. அதேசமயம் குடும்பங்களை உருவாக்க வேண்டியவர்கள் மனிதர்கள் என்பதை மறந்து விடுகிறோம். நோய்வாய்ப்படுகிறோம். வயதாகிறோம்” என்று இந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

An influx of new immigrants is shifting Canada’s gender ratio, as a higher share of male newcomers helps squeeze the female majority to its smallest margin in decades. The population of adult men grew 3.4% over the past year, while women rose 2.9%, making the spread between the growth of the two groups the widest in nearly 50 years of records, according to an analysis by Doug Porter, chief economist at Bank of Montreal.

The gap is even larger in the 25-to-44 age group, in which men have seen a 4.8% jump and women a 3.9% increase. There are 141,000 more men than women in this age bracket as of January, compared with a long-run average difference of zero.

“What we’ve seen in the last 10 years is that the growth rate in the male population has steadily been rising faster than the female population in that age group. It seems to be something a little bit more permanent,” Porter said in an interview.

The figures highlight the country’s changing demographic trends due to its liberal immigration policy, which aims to rapidly expand the pool of workers to stave long-term economic decline from an aging populace.



எல்.தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

பூமியின் சமுத்திரங்கள், வளிமண்டலம் மற்றும் புவி வெப்பநிலை போன்றவற்றை ஆய்வு செய்வதற்காக 'பேஸ்' என்ற புதிய செயற்கைக் கோளை நாசா விண்ணுக்கு அனுப்பியுள்ளது. குறித்த செயற்கைக்கோள் கேப் கனவெரலிலுள்ள ஏவுதளத்திலிருந்து பல்கன் என்ற ஸ்பேஸ் எக்ஸ் என்ற நிறுவனத்தின் ரொக்கட் மூலம் ஏவப்பட்டுள்ளது. சுமார் மூன்று ஆண்டுகளுக்கு இந்த செயற்கைக்கோள் பூமியிலிருந்து 420 மைல்கள் உயரத்தில் மிதந்தவாறு ஆய்வில் ஈடுபடும்.

புரதமும் கொழுப்பும் அதிகமாகக் கொண்ட புதிய வகை மாமிச அரிசி தென்கொரியாவின் யோன்செய் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். குறித்த புதிய வகை கலப்பின மாமிச அரிசி சாதாரண அரிசியைவிட ஏழு சதவீதம் அதிக புரதமும் எட்டு சதவீதம் கொழுப்பும் கொண்டுள்ளது. இந்த அரிசியை தயாரிக்க முதலில் மீனிலிருந்து எடுக்கப்படும் பசை போன்ற பொருளை அரிசியில் பூசுகின்றனர். இதனால் மீனின் துகள்கள் அரிசியில் ஒட்டிக் கொள்கின்றன. பின்னர் ஒரு பாத்திரத்தில் 11 நாட்கள் இட்டு இது பதப்படுத்தப்படுகிறது.

2022ம் ஆண்டில் 19,700க்கும் மேற்பட்ட கனடியர்கள் கோவிட் - 19 நோயால் இறந்துள்ளனர். எண்பது வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இறந்தது 78 சதவீதத்தால் உயர்வானது. இதே ஆண்டில் இளைஞர்களிடையே இறப்புகள் அதிகரிப்புக்கு கோவிட்-19 மட்டுமன்றி தற்கொலைகள், கொலைகள் மற்றும் போதைப்பொருள் நச்சுத்தன்மை பாவனை என்பவையும் காரணிகளாக இருந்துள்ளது. 2022ல் அனைத்து கோவிட் இறப்புகளிலும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 91.4 சதவீதம் பேர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பனிப்பாறைகள் உருகும் வேகத்தின் அடிப்படையில் விரைவில் கடல்மட்டம் 70 சென்ரிமீற்றர் வரை உயர்வதற்கு வாய்ப்பு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். உலக வெப்ப மயமாதல் அதிகரித்துச் செல்வதால் ஆர்டிக் மற்றும் அண்டார்டிக் பகுதியிலுள்ள பனிப்பாறைகள் வேகமாக உருக ஆரம்பித்துள்ளன. இது இவ்வாறு மோசமடைந்து வருவதுதான் தற்போதைய பருவநிலை மாற்றத்துக்கான அடிப்படைக் காரணமென ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் இணை அமைப்பு அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குத்துச்சண்டை வீராங்கனையான டினா ரஹிமி உலகிலேயே ஹிஜாப் அணிந்து விளையாடும் முதலாவது வீராங்கனையாவார். எதிர்வரும் யூலை மாதம் பாரிசில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுகிறார். ஈரானில் பிறந்து ஆஸ்திரேலியாவில் வாழும் இவரது தந்தையாரும் மல்யுத்த வீரர். 21 வயதிலிருந்து மேக்கப் எனப்படும் ஒப்பனையை முழுநேரத் தொழிலாக கொண்டிருந்த இவர் குத்துச்சண்டை பழக ஆரம்பித்ததிலிருந்து வீராங்கனையாக மாறியுள்ளார். ஏற்கனவே காமன்வெல்த் போட்டியிலும் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் கடந்த ஆண்டு 5,510 குழந்தைகள் பிறந்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தகவல் வெளியிட்டுள்ளார். இவர்களுள் 47 குழந்தைகள் இறந்த நிலையில் பிறந்துள்ளன. நியுமோனியா காய்ச்சலால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 1,052 பேரில் 238 பேர் கடந்த ஆண்டு மரணமாகியுள்ளனர். வாள்வெட்டு, அடிதடி, கத்திக்குத்து போன்ற தாக்குதல்களால் இங்கு அனுமதிக்கப்பட்ட 983 பேரில் 13 பேர் சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளனர்.

## மதிஅழகனின் நூல் வெளியீடு

மூத்த ஒலிபரப்பாளர் 'சொற்கோ' வி.என்.மதிஅழகனின் ஐம்பதாண்டு கால ஊடகப்பணியை வியந்து தொகுக்கப்பட்ட நூலின் அறிமுக விழா இந்த மாதம் 23ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2:00 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்ரரில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் அனைவரையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் கடந்த வருட இறுதியில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஸ்காபரோ அறிமுக விழா தொடர்பான விபரங்களுக்கு 647 390 9071.

## வாகன உரிமைத் தகடுகளை புதுப்பிப்பது ரத்து

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனங்களின் உரிமைத் தகடுகளை வருடாந்தம் புதுப்பிக்கும் நடைமுறையை மாகாண அரசு ரத்துச் செய்துள்ளது. புதிய திட்டத்தின் கீழ் வாகனங்களின் பதிவு தாமாகவே மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்ராறியோவில் இவ்வருட ஆரம்பத்தில் 1,015,139 வாகனங்கள் பாவனையில் இருந்தன. ஏற்கனவே வாகன பாவனை தொடர்பான தண்டப்பணம் ஏதாவது கட்டாதவர்களுக்கு இந்த வசதி கிடைக்காது.

## இருபது மில்லியன் ஆட்களுக்கு குடும்ப மருத்துவர் இல்லை

ஒன்ராறியோ மாகாணத்தில் சுமார் இருபது மில்லியன் ஆட்கள் குடும்ப மருத்துவர் இன்றி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வருடங்களில் இந்த எண்ணிக்கை மேலும் இரு மடங்காக அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஒன்ராறியோவில் பணியாற்றிய பெருமளவு குடும்ப மருத்துவர்கள் ஓய்வு பெற்றுள்ளதாகவும், புதிய நடைமுறைகளின் நெருக்கடியால் கணிசமானோர் ஒன்ராறியோ மாகாணத்திலிருந்து வெளியேறியிருப்பதாகவும் மருத்துவர்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

## கார்டினரின் ஒரு பகுதி மூன்று ஆண்டுகள் மூடப்படும்

ரொறன்ரோவிலிருந்து ஆரம்பமாகும் கார்டினர் நெடுஞ்சாலையின் ஒரு பகுதி இந்த மாத இறுதியில் மூடப்படவுள்ளது. டபரின் வீதியிலிருந்து ஸ்ட்ரச்சன் அவெனியு வரையான பகுதியே மூன்று ஆண்டுகளுக்கு மூடப்படுமெனவும், தேவைப்படின் இக்காலம் நீடிக்கப்படக்கூடுமெனவும் இக்காலத்தில் போக்குவரத்து நெரிசலாக இருக்குமெனவும் ரொறன்ரோ நகரசபை அறிவித்துள்ளது.



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்


# அடுத்த தலைமுறையின் அங்கலாய்ப்புகள்

## ஊரும் உலகும் - 25

குழந்தைகளையும் இளையோர்களையும் ஆட்டிப்படைத்துவரும் உளவியல் சார்ந்த சிக்கல்களும் இனம்தெரியாத மனநோய் அறிகுறிகளும் இன்று உலக நாடுகள் பலவற்றில் பாரிய பிரச்சனைப் பொருளாகத் தலைதூக்கி வருகிறதென்பது யாவரும் அறிந்ததே.

பெரும் தொற்றுநோய் போன்று குழந்தைகளுக்கு மிகச் சிறிய வயதிலேலேயே உள, மன நோய்கள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணிகள் எவை? இதற்கு மாற்றீடாக நாம் என்ன செய்யலாம் என சமூக - உளவியல் பேராசிரியர் ஜொனாதன் ஹெய்ட் நீண்ட காலமாக ஆய்வு செய்து தர்க்கத்துக்குரிய பல தரவுகளையும் சிக்கல்கள் கொண்ட தீர்வுகளையும் தமது புதிய நூல் வழியாக எம்முன் நிறுத்தியுள்ளார்.

அடுத்த தலைமுறையின் அங்கலாய்ப்புகள்: குழந்தைப் பருவத்தின் பாரிய நவீன மறுசீரமைப்பு, தொற்றுநோய் போன்ற மனநோய்களை எவ்வாறு ஏற்படுத்துகிறது (The Anxious Generation: How the Great Rewiring of Childhood is Causing an Epidemic of Mental Illness) என்ற தலைப்பிலான இவரது நூல் இந்த மார்ச் மாதம் 26ல் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




ஒரே நேரத்தில் பல நாடுகளைத் தாக்கும் பதின் பருவ மனநோய்கள் பற்றிய பல உண்மைகளை ஜொனாதன் ஹெய்ட் இந்த நூலில் மிகத் துல்லியமாக எடுத்துக் - கூறுகிறார்.

1980களில் பள்ளியிலும் வீட்டிலும் சுதந்திர-மாய் துள்ளி விளையாடிய குழந்தைகளின் மகிழ்ச்சி மனப்போக்கு இன்று குன்றிக் குறைவதற்கான காரணம் யாது? 2000த்தின் முற்பகுதியில் வருகைதரத் துவங்கிய கையடக்கத் தொலைபேசியின் அதீத பாவனை குழந்தைப் பருவத்தின் குறும்புத் தனங்களை எவ்வாறு காவு கொண்டது என ஆய்வு ரீதியாகத் தத்ரூபமாக விளக்கும் அறிஞர் ஹெய்ட் இக்காலக் குழந்தைகளின் வளர்ச்சிக் குன்றலை சமூகஉளவியல் மற்றும் நரம்பியல் வளர்ச்சியின் வழியாக ஆய்வு செய்துள்ளார்.

சமூக ஊடகங்கள் சிறுவர்களையும், பெண்களையும் ஏன் அதிக அளவில் சேதப்படுத்துகின்றது என்பதையும், சிறுவர் - கள் ஏன் நிஜ உலகத்திலிருந்து மெய்நிகர் உலகிற்குள் பிரவேசிக்க ஓட்டமாக ஓடிச்செல்கிறார்கள் எனவும் குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் பேரழிவு தரும் விளைவுகளை இணைய வலை எவ்வாறு ஏற்படுத்துகிறது என்பதையும் அவர் தெளிவாக்குகிறார்.

நிஜ உலகில் குழந்தைகளுக்கு அதீத பாதுகாப்பை உறுதிப்படுத்திய எமது சமூகம் சிந்தையை சிதைக்கும் டிஜிட்டல் வலையுலகில் எவ்வித பாதுகாப்பையும் வழங்கத் தவறிவிட்டது என குற்றம் சுமத்தியுள்ளார்.

1992ல் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் சமூக உளவியலில் முனைவர் பட்டம் பெற்ற ஜொனாதன் ஹெய்ட், நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் ஸ்டெர்ன் ஸ்கூல் ஆஃப் பிசினஸில் நெறிமுறை தலைமைப் பேராசிரியராக இப்போது பணி புரிகிறார். குழந்தைப் பருவத்தின் நான்கு பெரும் தீங்குகளை ஹெய்ட் தமது நூலில் ஆவணப்படுத்துகிறார். அவை: தூக்க மின்மை, சமூகஉறவுப் பலமின்மை, அறிவாற்றல் சிதைவு, இலத்திரனியலுக்கு அடிமையாதல். நூலின் இறுதியில் பெற்றோர்கள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், அரசாங்கங்கள் போன்றவைக்கும் மற்றும் பதின்ம வயதினருக்கும் தனித்தனி அத்தியாயங்களுடன் உறுதியான மற்றும் அறிவியல் அடிப்படையிலான ஆலோசனை - களை நடைமுறைப்போக்கில் வழங்குகிறார். டிஜிட்டல் யுகத்தில் ஆரோக்கியமான வளர்ச்சி எப்படி இருக்கும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள எமது மூதாதையாரின் ஞானவிவேகம் மற்றும் நவீன உளவியலையும் அவர் உதாரணம் கொண்டு விளக்குகிறார்.

அவரது நூல் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**1. ஆறாத அலைகள்:** இப்பகுதியில் இளையோரின் மன ஆரோக்கியம் குறித்த மிக முக்கியமான புள்ளிவிவரங்களைத் தந்துள்ளார்.

**2. விளையாடித் திரிந்த குழந்தைப் பருவத்தின் வீழ்ச்சி:** குழந்தைப் பருவத்தில் இருந்து இளமைப் பருவம் வரை தெளிவான பாதையை அழித்து அவர்களின் இயல்பான வளர்ச்சியை எவ்வாறு நாம் குழப்பியுள்ளோம் என்பதை ஆதாரத்துடன் விவாதிக்கின்றார்.

**3. கைத்தொலைபேசி ஏந்திய குழந்தைப் பருவத்தின் தோற்றம்:** கைத்தொலைபேசியால் குழந்தைப் பருவத்தில் ஏற்படும் தீமைகள், சிறுமிகளுக்கு ஏற்படும் தீங்கான அத்தியாயம், சிறுவர்களுக்கு ஏற்படும் தீங்குகள் மற்றும் 'ஆன்மிகச் சீரழிவு' என்பவற்றைப் பட்டியல் போட்டு தெளிவாக்குகின்றார்.

**4. சிறந்த குழந்தைப் பருவத்திற்கான கூட்டுச் செயல்கள்:** பலவித பாதிப்புகளையும் மாற்ற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கி பெற்றோர்கள், பள்ளிகள், அரசாங்கங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் இளைஞர்கள் எவ்வாறு 'கூட்டு நடவடிக்கை சிக்கல்களில்' மாட்டிள்ளனர் எனவும் தனிநபர்கள் ஒன்றிணைந்து செயல்படும்போது இவை எவ்வாறு தீர்க்கப்படும் என்பதையும் நன்கு விளக்கியுள்ளார்.

நிலையான நிஜ உலக சமூகங்களில் குழந்தைகளை வளர்க்க வழிகளைத் தேடுங்கள். ஆன்லைன் நெட்வேக்குகள் நெருக்கமாய் பிணைப்பதாகவோ அல்லது திருப்திகரமாகவோ இல்லை. உயர் - நிலைப் பள்ளி வரை ஸ்மார்ட்போன் பிள்ளைகளுக்கு கொடுப்பது தவறு எனவும் உயர்நிலைப் பள்ளி தொடங்கும் வரை (குறைந்தபட்சம்) அனைத்து சமூக ஊடக தளங்களிலும் கணக்கு - களைத் திறப்பதை தாமதப்படுத்தல் வேண்டும் என பயனுள்ள, நடைமுறை ரீதியிலான பல அறிவுரைகளை இந்த நூலில் அவர் முன்வைத்துள்ளார்.


# Debunking the misinformation and stigma Around

# Type 2 diabetes

Many Canadians have a close friend, colleague or family member that is living with the disease. It's estimated 11.7 million people have Type 1 diabetes, Type 2 diabetes or pre-diabetes, conditions that prevent the body from making insulin, or properly managing the insulin it makes.

While the number of people living with the disease continues to climb and that costs the Canadian health-care system $30 billion annually, Dr. Christine Palmay, a family physician and contributor to digital health-care platform Care to Know, says there continues to be misinformation and stigma about the chronic disease.

She worries this may, in part, contribute to the large numbers of undiagnosed Type 2 diabetes cases that are not being identified or managed.




There are several different types of diabetes and reasons why someone will develop it at different stages in their lifetime," says Dr. Palmay. "It's not a matter of eating too much sugar or having a lack of willpower. There is no one common cause that fits with all types of diabetes.

However, once we learn more about it, we can recognize symptoms and advocate for our better health."

### The most common misconceptions about Type 2 diabetes:

Myth: Diabetes is always noticeable by symptoms

Truth: Some people with the disease may not experience noticeable symptoms for a long time. Regular check-ups and screening are important for early detection.

Myth: Diabetes is not a serious condition

Truth: Diabetes is a chronic condition that can lead to serious health complications if not properly managed. It's associated with stroke, heart disease, kidney disease, vision loss and nerve damage.

Myth: Once diagnosed, diabetes can be cured

Truth: Diabetes is not curable, but it can be effectively managed through lifestyle changes and medications.

Myth: Managing diabetes with medication is a sign of failure in controlling blood sugar levels naturally

Truth: Diabetes medications are tools that help to manage the condition effectively and play a vital role in attaining target blood glucose levels.

Myth: Only obese people get diabetes

Truth: While obesity is a risk factor, thin individuals can also develop the condition. Genetics, ethnicity, age and lifestyle are also factors that can affect the likelihood of having the condition.

Myth: Diabetes is caused by eating too much sugar

Truth: While overconsumption of sugar can lead to obesity, diabetes is a complex condition dependent on genetic, lifestyle and other health factors such as high blood pressure and cholesterol levels.

### Symptoms

Symptoms for type 2 diabetes usually develop slowly and many times asymptomatic. Common major symptoms are:

Frequent urination, Increased thirst, Fatigue, tiredness, Sudden weight loss, Itching around the genitals, Slow healing cuts or wounds, Blurred vision

### Causes

Type 2 diabetes can occur when the body becomes resistant to insulin. Cells are not able to absorb glucose and convert it into energy as a result of this resistance. Excess abdominal fat is a major cause, in addition to genetics and lifestyle.

### The risk factors include:

Obesity, Sedentary lifestyle, Family history, Age - people above the age of 45 years are at higher risk

Prediabetes, Gestational diabetes, Polycystic ovarian syndrome



தேசா தெய்வேந்திரன்

# வேலை தேடும் வேளையில் நிதி நிலைமையை அவதானிப்பது

புதிதாக கனடாவுக்கு வந்தவராயினும் ஏதோ காரணத்துக்காக வேலை இழந்தவராயினும், வேலை தேடும் காலத்தில் நிதி நிலைமையை அவதானித்து தேவையற்ற செலவுகளை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.

ஒருவர் வேலையை இழக்கும்போது அவர் தனது செலவுகளை கட்டுப்படுத்துவது இல்லை. மாறாக தேவையற்ற ஆடம்பர செலவுகளை செய்கின்றார் என்பதை நான் எனது 32 வருட சேவையில் அவதானித்துள்ளேன்.

உதாரணமாக தேவையற்ற நீண்டகால விடுமுறை, பெருந்தொகை பண முதலீட்டு வியாபாரம் ஆரம்பித்தல், வீடு - சொத்து கொள்முதலில் முதலிடுதல் (Real eastate investment) போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்விடயங்களில் ஈடுபட வேண்டாமென்று நான் கூறவில்லை. இதில் எதனை நீங்கள் செய்வதானாலும் உங்களிடம் தேவையான பணம் கையிலிருப்பில் இருக்க வேண்டும். எவரிடமாவது கடன் வாங்கச் செல்வதால்தான் பிரச்சனைகளுள் சிக்குப்படும் நிலைமை உருவாகிறது.

கடன் வாங்குவதால் பல பிரச்சனைகள் ஏற்படும். வேலை தேடும் வேளையில் அதிக வட்டி வீதத்தில் கடன் வாங்க நேரிடும். வருமானமே குறைந்துள்ள நிலையில் அதிக வட்டி கடனுக்கு செலுத்துவது முடியாதது.

எனக்குத் தெரிந்த ஒருவர் தகவல் தொழில்நுட்ப (Information Technology) அலுவலகத்தில் முகாமையாளர் தராதர வேலையில் இருந்தவர். திடீரென்று நிறுவன மீளமைப்புக் காரணமாக வேலையிழந்துவிட்டார். நிறைய சம்பளம் பெற்றிருந்தபோதும் அவரிடம் சேமிப்பு எதுவும் இருக்கவில்லை. மனைவியை அவர் வேலைக்கு அனுப்பவில்லை. இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். வேலை இழக்கும் போது இவர் ஐம்பது வயதைத் தாண்டிவிட்டார். உடனடியாக வேலை தேடும் அவசியம் இவருக்கிருந்தது.

இதன் காரணமாக தமது நண்பர் ஒருவருடைய கட்டிட நிர்மாண வேலையில் உதவுவதற்குச் சென்றுள்ளார். இவருக்கு அந்த வேலையில் அனுபவம் இல்லாததனால் வேலை செய்யும்போது கீழே விழுந்து முதுகெலும்பு முறிந்துவிட்டது. மூன்று வருடங்கள் படுக்கையில் இருந்தார். இவரால் காப்புறுதி கொடுப்பனவு பெற முடியவில்லை. எவ்வித வருமானமும் இல்லாததால் தனது வீட்டின் பேரில் கடன் எடுத்து இறுதியில் அந்த வீட்டையே விற்று விட்டார்.

தற்போது வாடகை வீடொன்றில் வசிக்கிறார். அவரது மனைவி தனியார் விற்பனை நிறுவனமொன்றில் பணி புரிகிறார். கனவிலுங்கூட நினைத்துப் பார்க்க முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் இவர் தள்ளப்பட்டுள்ளார்.

நல்ல வருமானம் பெறும் நிலையிலுள்ளபோது, குறைந்தது ஒரு வருடத்துக்கான செலவுகளையாவது செலுத்தக்கூடிய பணத்தை சேமிப்பில் வைத்திருக்க வேண்டும். இதனைத் தவிர ஏதாவது தொழில் தொடங்க விரும்பினால் அதற்குத் தேவையான முற்பணம் மற்றும் திட்டமிடல் என்பவை அவசியமாகும். முக்கியமாக உங்களுடைய வாழ்க்கைத் துணை அவசரமான நிலையில் வேலைக்குச் செல்வதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

கணவர் முழுநேர வேலையில் இருந்தால் பிள்ளைகளை மனைவி பார்த்துக் கொள்ளும் அவசியம் இருந்தால் அதேசமயம் Medical Office, Pharmacy Assistant போன்ற வசதியான நேரங்களில் வேலை செய்யக்கூடிய துறைகளில் கல்வி கற்று அதன் பின்னர் பகுதி நேர அல்லது முழுநேர வேலை ஒன்றை பெற்றுக் கொண்டால் கணவரின் வருமான இழப்பு நேரங்களில் தோள் கொடுக்க முடியும்.

வாழ்க்கையில் எது வேண்டுமானாலும் எப்போதும் நடக்கலாம். விழிப்புணர்வோடு நாம் செயல்படுவோமாக இருந்தால் எதிர்வரக்கூடிய பல பிரச்சனைகளிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

## WATCH YOUR FINANCES WHILE YOU ARE JOB-HUNTING

When people lose their jobs, their personal and family financials go through a rough shock. It is essential to manage the finances and take control of them. Remember, for the next few months, you may have limited income or no income at all, but your expenses and bills keep mounting, especially if you are borrowing money from high-interest borrowings like lines of credit or credit cards, private lenders, where the interest becomes an additional expense that you may have to start paying soon.

You don't want to use up your life savings or even touch it. The more you use up your life savings, the more you will start to panic and end up selecting a job that doesn't fit your career or meet your financial needs. By selling your services short, you will end up in an underemployed situation, which will lead to depression, low motivation for work efficiency and eventually lead to another job loss.



வேதநாயகம் தபேந்திரன் - இலங்கை

# அழகுக்கு ஒரு சீப்பு

1997 பெப்ரவரி, வடக்கு கிழக்கு மாகாணசபை இயங்கிய காலம். தலைமைச் செயலகம் திருக்கோணமலை நகரில் இருந்தது.

புதிதாக சமூக சேவைகள் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டு நியமனத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டோருக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நடந்தது.

சிங்கள சினிமாத்துறையில் ஜொலித்த நடிகர் காமினி பொன்சேகா ஆளுநராகப் பணியாற்றிய காலம். அவர் நியமனக் கடிதத்தை வழங்கி விட்டு உரையாற்றுகின்-றார். இடையில் ஒரு நகைச்சுவைக் கதை விடுகின்றார்.

அவரது தலை மொட்டந்தலை. அதனை வலது கையால் ஒரு தடவு தடவி விட்டு "நான் இப்போது பொக்கற்றில் சீப்புக் கொண்டு திரியத் தேவையில்லை. ஏனென்றால் எனது தலை மொட்டை. அதனால் சீப்பை வீட்டில் வைத்து விட்டேன். ஆனால், யாழ்ப்பாணத்தவர்களாயின் தலை மொட்டையாக வந்தால் சீப்பை விற்றுக் காசாக்கி விடுவார்கள்."

அவர் இப்படிச் சொன்னபோது சபை கலகலத்தது. அவர் ஆளுநரல்லவா? சிரித்தால்தானே அவருக்கும் பிடிக்குமென எல்லா அதிகாரிகளுமே சிரித்தார்கள்.

ஆனால் எனக்குள் கோபம் கொப்பளித்தது. ஆறுகள், மலைகள், பாரிய குளங்கள் இல்லாத யாழ்ப்பாணத்தவர்கள் எங்கும் சிக்கனம் எதிலும் சிக்கனம் எனக் கொண்டுதான் முன்னேறினார்கள். சீப்புச் சிக்கனப் பகடிக் கதை மிகைப்படுத்தல்தான். என்றாலும் சிக்கனம் உண்மையானது.

"தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாடசாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அன்னை."
இப்படியொரு பாடல் உள்ளது.

சீப்பு என்பது தலை வாரவும் தலைமுடியை அழகுபடுத்தவும் தூய்மைப்படுத்தவும் பயன்படுத்தும் ஒரு கருவியாகும். ஆங்கிலத்தில் Comb எனும் சொல்லால் அழைப்பார்கள்.

வாழைக்குலை போட்டவுடன் அதன் பொத்தி விரிந்து வரும் காய்களும் சீப்பு என்றுதான் அழைக்கப்படு கிறது. கடையில் வாழைப்பழம் வாங்கும் போதும் ஒரு சீப்பு வாழைப்பழத்தை நிறுத்துத் தாருங்கள் என்றுதான் கேட்டு வாங்குகின்றோம். வாழைக்காயைச் சீப்புச் சீப்பாக வெட்டி வை எனக் கூறும் பேச்சு வழக்குச் சொற்கள் உண்டு.

மங்கல நிகழ்வுகளில் வாழைப் பழங்களைச் சீப்புச் சீப்பாக அடுக்கி வைத்திருக்கும் போது அதன் அழகு தனி ஒரு வகை.

நிறைகுடத்தில் வைக்கப்படும் வாழைப்பழச் சீப்பின் அழகு ஒரு வகை. திருமணப் பேச்சு நிறைவு நிச்சயதார்த்தத்தின் போது தாம்பாளத்தில் வைக்கப்படும் வாழைப்பழச் சீப்பின் அழகு ஒருவகை. உணவாகும் வாழைப்பழச் சீப்புகளின் பெறுமதி உயர்வானது.

தலைமுடியை அழகுபடுத்தும் சீப்பு பிளாஸ்ரிக், மரம், இரும்பு ஏனைய உலோகங்களால் செய்யப்படுவது வழக்கம். பேன் பார்க்கும் சீப்பு என ஒருவகைச் சீப்பு உண்டு.

முன்னர் ஒரு காலத்தில் ஓலையால் வேய்ந்த மண்வீட்டின் ஓர்புறமாக தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும் பேன் பார்க்கும் சீப்பால் தலைவாரிப் பேன் பார்த்த நிகழ்வு உண்டு. ஆண்களில் ஸ்ரைலை விரும்புவோர் எப்போதும் பொக்கற்றினுள் ஒரு சீப்பை வைத்துக் கொண்டு தான் செல்வார்கள்.

சைக்கிளிலோ பஸ்சிலோ மோட்டார் சைக்கிளிலோ ஓரிடத்துக்குப் பயணம் போனால் சீப்பை எடுத்து தலையை அழகுபடுத்தி இழுத்து விட்டுத் தான் செல்வார்கள். இதற்காகப் பொக்கற்றினுள் சிறியதொரு கண்ணாடி எப்போதும் இருக்கும். மோட்டார் சைக்கிளில் போவதாயின் அதன் பின்பக்கப் பார்வைக் கண்ணாடியில் முகம் பார்த்துத் தலையிழுத்து ஸ்ரைலாகப் போவார்கள்.

சிலர் பயணம் போனால் அங்குள்ள சலூன் ஒன்றுக்குப் போய்த் தாம் எடுத்துச் சென்ற சீப்பால் தலைவாரி விட்டுத் தான் உரிய இடத்துக்குப் போவர். தலைமுடி அடர்த்தியானோரும் சீப்புப் பாவிக்கின்றனர். தலைமுடியை அழகாக அளவாக இழுத்துக் கொள்வார்கள். சுருள் சுருளாகத் தலைமுடி உள்ளோர் பாக்கியசா - லிகள். எந்தக் காற்றுக்கும் அசையாமல் தலைமுடிகள் வெகு கம்பீரமாக இருக்கும். இவர்கள் சீப்பு வைத்துக் கொள்வது குறைவு.

உச்சந்தலை மொட்டையாகவும் தலையின் கீழ் ஓரங்களில் முடி உள்ளவர்கள் பாடு பெருந்திண்டாட்டம். ஓரங்களில் வளர்ந்த தலைமுடியை நீளமாக வளர்த்து அதனைத் தமது மொட்டந்தலைக்கு மேலாக இழுத்து மொட்டையை மறைக்க முற்படுபவர்களைப் பார்க்க இரசனையாக இருக்கும். காற்றில் தலைமுடி பறக்கும். அடிக்கடி சீப்பை எடுத்து இழுப்பார்கள். சிலர் தலைமுடியுடன் கிறீம் பூசித் தலைமுடியைத் தலையுடன் ஒட்ட வைத்துக் கொள்வார்கள்.

சுருள் இல்லாமல் மிகவும் மென்மைத் தன்மை உள்ள அதிக தலைமுடியை உடையவர்களுக்குத் தான் அடிக்கடி சீப்புத் தேவை. தலைமுடிகள் வழிந்தோடும். அடிக்கடி அங்கும் இங்கும் பறக்கும். தலையைக் கைகளால் சரி செய்து கொள் - வார்கள். சீப்பை அடிக்கடி எடுத்துத் தலையைக் கோதிக் கோதி இழுத்துக் கொள்வார்கள்.

ஊர்வழக்கில் சிலரது பெயரில் சீப்பு எனும் சொல்லும் சேர்ந்து இருக்கும். சீப்புக் கந்தசாமி, சீப்புச் செல்லத்துரை எனப் பெயர்கள் புழங்கிய காலம் உண்டு.

சிங்களவர்களில் தலைமுடியுடன் சீப்பைக் கொழுவியபடித் திரியும் சீப்புச் சிங்கள - வர் உயர்சாதியினராகக் கூறப்படும் நடைமுறையும் வரலாறும் உண்டு.

தலைமுடியை முழுவதுமாக மொட்டையடித்துக் கொண்டு மொட்டந்தலையராகத் திரிவது ஒருவகை ஸ்ரைலாக இப்போது வந்து விட்டது. இவர்களுக்குச் சீப்புத் தேவையில்லை. தலைக்குக் கிறீம்பூசி மொட்டையாக வைத்திருப்பதை அழகாக நினைக்கின்றார்கள்.

வசதி குறைந்த காலத்தில் ஒரு சீப்பை வைத்துக் குடும்பத்தின் எல்லா உறுப்பினர் களுமே தலைவாரிய காலம் உண்டு. ஒருவரது தலையில் உள்ள பேன் சீப்பு பாவிக்கும் எல்லோருக்குமே தொற்றி விடும். அதனால் எல்லோருமே ஆளுக்கொரு சீப்பு தனித்தனியாகப் பாவிக்கும் பழக்கமுண்டு.

சீப்பு பணக்காரப் பொருளாகப் பார்க்கப்பட்ட காலம் மலையேறி விட்டது. அதன் வடிவங்கள் பலப் பல. சின்னதாக, கைக்கு அடக்கமானதாக, பெரியதாக எனப் பல வகைகள் உண்டு.

கண்டங்கள் பல கடந்தாலும் நாடுகள் பல இருந்தாலும் சீப்பு மனித இனம் முழுவதுமே பாவிக்கும் ஓர் அழகுசாதனம் எனலாம். மிக எளிமையான மலிவான ஓர் அழகுசாதனம்.

சீப்புத் தொடர்பான துணுக்குகளும் படங்களும் பாடல்களும் பழமொழிகளுமெனச் சொல்லிக் கொண்டே போகலாம்.

உங்கள் நினைவில் வருபவற்றையும் கிளறிப் பாருங்கள்.



கனகேஸ்வரி நடராஜா

# அவசர சிகிச்சைப் பிரிவின் அவலம்

அம்புலன்ஸ் வண்டியை அழைப்பதும், அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்வதும் பத்து வருடங்களுக்கு முன்னர் எனக்குப் பழக்கப்பட்ட விடயமாக இருந்தது. எனது கணவர் இறந்து பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. அவரது கடைசி நாட்களில் அடிக்கடி 911 தொலைபேசி இலக்கத்தை அழைத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அவரை நான் கூட்டிச் செல்வதுண்டு. சில சமயங்களில் ஒரு நாளில் இரண்டு முறை போய்வந்த ஞாபகம்கூட எனக்குண்டு.

அழைத்த சில நிமிடங்களில் அம்புலன்ஸ் வண்டி வந்துவிடும். அதில் பணியாற்றும் ஊழியர்கள் அன்பாகவும் ஆறுதலாகவும் உரையாடி எங்கள் பதற்றத்தைக் குறைத்து விடுவார்கள். அம்புலன்ஸ் வண்டி என்னையும் ஏற்றிச் செல்லும். அவசர சிகிச்சைப் பிரிவின் விறாந்தையில் ஒரு கதிரையில் நான் இருப்பேன். அம்புலன்ஸ் பணியாளர்களே பதிவு செய்யும் வேலைகளைச் செய்வார்கள். சில நிமிடங்களில் எனது கணவரை பரிசோதிக்கத் தொடங்கிவிடுவார்கள். நோயின் தன்மைக்கேற்ப சில சமயங்களில் அவசர சிகிச்சைப் பிரிவிலேயே வைத்தியம் நடைபெற்று நாங்கள் வீடு திரும்பி விடுவோம். வேறு சில வேளைகளில் பரிசோதனை அறிக்கைகள் வந்ததும் ஆஸ்பத்திரியிலேயே எனது கணவர் அனுமதிக்கப்படுவார்.

அம்புலன்ஸ் இருக்கிறதுதானே, கூப்பிட்ட குரலுக்கு உடனடியாக ஆபத்பாந்தவர்களாக வருவார்கள்தானே, எந்த அகால வேளையிலும் அவசர சிகிச்சைப் பிரிவில் எம்மைப் பார்த்துக் கொள்வார்கள்தானே என்ற நம்பிக்கையும் மனத்துணிவும் எனக்கிருந்தது. இதனால் எனது கணவரது நோயின் தாக்கமோ பயமோ பத்து வருடங்களுக்கு முன்னர் எனக்கு ஏற்படவில்லை. அத்தகைய ஒரு நம்பிக்கை இந்நாட்டு வைத்திய சேவை மேல் எனக்கிருந்தது.

கிட்டத்தட்ட பத்து வருட இடைவெளிக்குப் பின்னர் நான் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்று இரவு ஒன்பது மணி இருக்கும். றொறன்ரோவை கடுங்குளிரும் கொட்டும் பனியும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. நானே எனக்காக அம்புலன்ஸை அழைக்க வேண்டிய பரிதாபகரமான சம்பவம். 911 என்ற இலக்கத்தை அழைத்த உடனேயே அம்புலன்ஸ் வண்டியும் மூன்று பணியாளர்களும் வந்துவிட்டனர். உடனடியாக செய்ய வேண்டிய பரிசோதனைகளை செய்தார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரே அவசரம். வேறு ஒரு நோயாளியிடம் செல்ல வேண்டுமென்பதால் சிந்திக்கக்கூட எனக்கு நேர அவகாசம் தராது வண்டியிலேற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று இறக்கிவிட்டு உடனேயே மாயமாக மறைந்து விட்டார்கள்.

ஒருவகையான அதிர்ச்சி இங்குதான் எனக்குக் காத்திருந்தது. பத்து வருட காலத்தில் அவசர சிகிச்சைப் பிரிவில் எத்தனை மாற்றம் என்பதை ஒரு கணத்திலேயே புரிந்து கொண்டேன். அவசர சிகிச்சைப் பிரிவு நோயாளர்களால் நிரம்பி வழிந்தபடி இருந்தது. வசதியாக இருப்பதற்குக்கூட இடம் கிடைக்கவில்லை. குழந்தைகளின் அழுகைச் சத்தம், மூத்தோர்களின் முனகல் சத்தம், சிறுவர்கள் மூச்சு விடாத இருமலோடு போராடிக் கொண்டிருந்தனர். அங்கிருக்கும்போது ஏதாவது நோய் எங்களுக்கும் தொற்றி விடுமோ என்ற அச்சம் எல்லோரிடமும் காணப்பட்டது. எப்போது வைத்தியர் வந்து எங்களைப் பார்த்து வீட்டுக்குச் செல்லுமாறு சொல்வாரென்ற ஏக்கம் கலந்த பார்வை எல்லோரிடமும் இருந்தது. நோயாளர்களோடு உதவிக்கு வந்தவர்கள் இருக்க இடமில்லாது அங்குமிங்குமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர். இங்கு ஏன் வந்தோமென்ற மனநிலைதான் ஏற்பட்டது. வைத்தியர் ஒருவர் மாத்திரமே சகல நோயாளர்களையும் பார்க்க வேண்டியிருந்தது.

அவர்தான் என்ன செய்ய முடியும். அடம்பிடித்து அழுது கொண்டிருந்த குழந்தைகளோடு அவர் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொண்ட விதம் பாராட்டப்பட வேண்டியது. இரவு முழுவதும் அவர் நின்றவாறே கணினியோடு கூடிய வண்டிலை இழுத்துக் கொண்டு திரிந்தார். அவரைப் பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது.

இரவு ஒன்பது மணியளவில் அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் சென்ற எனக்கு பல மணி நேரங்களின் பின்னரே இரத்தப் பரிசோதனை, ECG, CT Scan என்பன நடைபெற்றன. மறுநாள் காலை 6:30 மணியளவில் எனது பரிசோதனை அறிக்கைகள் வந்துவிட்டதாகவும் வைத்தியர் மிக விரைவில் வந்து என்னுடன் கதைப்பாரென்றும் மருத்துவத் தாதி ஒருவர் கூறினார். அடுத்த சில நிமிடங்களில், இரவு முழுக்க இருக்காமலே ஓடியோடி வைத்தியம் பார்த்த அதே வைத்தியர் எனக்கான பரிசோதனை அறிக்கைகளுடன் என்னிடம் வந்தார்.

அந்த அறிக்கையில் இருந்தவைகளை என்னிடம் ஆறுதலாக விளங்கப்படுத்திவிட்டு, தொடர்ந்து எனது குடும்ப வைத்தியரின் பரிந்துரையில் நான் உட்கொள்ளும் மருந்துகளை எடுக்கும்படியும், பரிசோதனை அறிக்கைகளோடு குடும்ப வைத்தியரை சென்று சந்திக்குமாறும் கூறினார். வீட்டுக்குப் போனால் காணும் என்ற மனநிலையில் இருந்த நான் கிட்டத்தட்ட பத்து மணித்தியாலங்களை அவசர சிகிச்சைப் பிரிவில் கழித்த பின்னர் ராக்சி ஒன்றைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தேன். எனக்கு முன்னரே அங்கு நோயாளர் பலர் வைத்திய பரிசோதனை அறிக்கைகள் வந்து சேராத காரணத்தால் அவசர சிகிச்சைப் பிரிவில் இருப்பதைப் பார்த்த பொழுது நான் பட்ட கஷ்டங்கள் பரவாயில்லை என்று எண்ணினேன்.

அண்மைக் காலங்களில் தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்ற ஊடகங்களில் அவசர சிகிச்சைப் பிரிவின் அவலங்கள் பற்றி அடிக்கடி கூறப்படுபவைகளை பார்த்தும் வாசித்தும் உள்ளோம். ஆனால் இவ்வளவு பாரதூரமான நிலையில் இன்றைய வைத்திய வசதிகள் இங்கு இருக்கிறது என்பதை அனுபவம் மூலமாக தெரிய வரும்போதுதான் அதன் தாக்கத்தை எம்மால் உணர முடிகிறது. இத்தகைய பயங்கரமான நிலைமைக்கு யாரைக் குறை கூறுவது என்று தெரியவில்லை.

வைத்தியர்கள் பற்றாக்குறையா, அரச நிதி ஒதுக்கீட்டின் குறைவா, அதிகரிக்கும் மக்கள் தொகையா, குடும்ப வைத்தியரை உடனடியாக சந்திக்க முடியாத நெருக்கடியா? எதனைக் காரணம் காட்டுவது என்று தெரியவில்லை. இத்தகைய நிலைமை நீடிக்காமல் பார்த்துக் கொள்வது அரசின் பாரிய பொறுப்பு.



இரா. சம்பந்தன்

# என்னதான் இல்லை எங்கள் தமிழில்!

சங்க இலக்கியத்தின் எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடலும் ஒன்று அதிலே காணப்படும் ஒரு பாடலுக்கு நாம் செல்லும் முன்பு சங்க மக்களின் அகம் புறம் என்ற ஒழுக்க வாழ்விய - லைத் தெரிந்து கொள்ள வேண்டும். வெளியே சொல்லக் கூடிய ஒரு மனிதனின் வீர உணர்வு கொடை மனப்பான்மை போன்ற செய்திகள் புறம் என்றும் யாருக்கும் சொல்ல முடியாமல் நடந்ததை அகத்திலே மட்டும் இரகசியமாகப் பாதுகாக்க வேண்டிய காம நிகழ்வுகளை அகம் என்றும் நாம் எளிமை -யாகக் கூறிக் கொள்ளலாம்.

அந்த அக ஒழுக்கத்தையும் சங்க இலக்கியம் கற்பியல் களவியல் என்று இரண்டாகப் பிரித்து வைத்துக் கொண்டது. வயது வந்த ஆடவனும் ஒரு பெண்ணும் பெற்றோர் முதல் பிறர் யாரும் அறியாமல் தமக்குள் காதல் கொண்டு யாரும் காணாத இடங்களில் சந்தித்து உடல் சுகத்தை அனுபவித்து வருவது களவு எனப்பட்டது. அது சில வேளைகளில் நண்பர்களுக்கு மட்டும் தெரிந்து இருந்தது.

இந்தக் களவு ஒழுக்கத்தில் இருந்து விடுபட்டு ஒரு ஆடவனும் பெண்ணும் ஊரறிய பெற்றார் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வில் கற்பு நெறியோடு வாழத் தொடங்குவதைக் கற்பு என்றது சங்க இலக்கியம்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே

என்று தொல்காப்பியர் கற்பு நெறிக்கு இலக்கணம் எழுதினார். தொல்காப்பியம் வகுத்த அந்த இலக்கணத்தை மீறாமல் திருவள்ளுவர் கூட தனது காமத்துப் பாலைக் களவியல் கற்பியல் என்று இரண்டாகப் பிரித்துக் கொண்டு குறள் எழுதினார் என்றால் தொல்காப்பியத்தின் வலிமையை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இவ்வாறு வகுக்கப்பட்ட களவு கற்பு ஒழுக்கங்களைக் கருப் - பொருளாகக் கொண்டு சங்க இலக்கியங்கள் தோன்றியிருந் - தாலும் களவை விடக் கற்பொழுக்கமே மனித வாழ்வுக்குச் சிறந்தது என்ற கருத்தை அதிகமாக வலியுறுத்தின.

ஒருவனிடம் ஒருபெண் காதல் கொண்டதற்காக அப்பெண்ணைத் தாய் வளர்த்த முறை சரியில்லை என்று ஊர்ப் பெண்கள் அந்தத் தாய் தெருவில் போய் வரும்போதெல்லாம் கடைக் கண்ணால் பார்த்து தம் மூக்கின் நுனியிலே விரல் வைத்து வாயை மறைத்துக் கொண்டு கேலி பேசினர் என்றும் கோபத்தோடு வீடு வந்த தாய் எனக்கு இப்படி அவமானத்தைத் தேடித்தரவா நீ பிறந்து இருக்கிறாய் என்று தடி எடுத்து மகளை அடித்ததாக நற்றிணை பேசுகின்றது.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்தி
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற
சிறு கோல் வலந்தனள் அன்னை அலைப்ப

(நற்றிணை 149)

ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடக்கின்றது. ஆண் பிள்ளைகளைப் பெற்ற பெரிய வயிற்றை உடைய நான்கு பெண்கள் சூழ்ந்து கொண்டு தலையிலே தண்ணீர் தெளித்து பெண்ணே நீ கற்பு நெறியிலே வழுவாமல் வாழ்ந்து உனது கணவனுக்கும் உங்கள் இருவரையும் பெற்ற பெற்றோருக்கும் நல்லது செய்து வாழ்வாயாக என்று வாழ்த்தியதாக சொல்கின்றது அகநானூறு

புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று
வால் இழை மகளிர் நால்வர் கூடி
கற்பினின் வழாஅ நற் பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆக என
நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி

(அகநானூறு 86)

சங்க காலத்தில் மட்டுமல்ல இன்று நாம் பார்த்தாலும் இந்தக் கருத்துக்கள் நல்ல செய்திகளாகத்தான் தெரிகின்றன. ஆனால் ஒரு பெண்ணும் ஆணும் திருமணத்துக்கு முன்பே மறைந்து பழகுவதைத் தவிர்த்து பெரியோர்கள் முன்னிலை - யில் இல்லற வாழ்வில் இணைந்து கற்பு நெறியில் வாழும் வாழ்வை இகழ்ந்து பேசும் சங்க இலக்கியம் ஒன்று உண்டு. அது தான் மேலே சொல்லப்பட்ட பரிபாடல்.

வைகை ஆறு மலையிலே ஊற்றாகத் தோன்றி அருவியாக வளர்ந்து வரும் வழியிலே மரம் செடி கொடிகளை எல்லாம் தழுவி இன்புற்று இறுதியில் நதியாக நடந்து முடிவில் கடலிலே சென்று கலக்கின்ற காட்சியைப் பார்க்கின்றான் ஒரு சங்க காலத்துப் புலவன். அவன் நலன்துவன் என்கிறார்கள் சிலர்

அவன் வைகை ஆற்றைப் பார்த்துக் கேட்டான், என்ன வைகையே பெண்கள் எங்கோ பிறந்து அங்குள்ள ஆடவ - னோடு களவாக சேர்ந்து பழகித் தினமும் சந்தோசம் அடைந்து வந்த ஒரு உயர்ந்த வாழ்க்கையை உதறி விட்டு அறிவில்லாமல் திருமணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்கு செல்லும் இழிவான வாழ்க்கைக்கு ஆசைப் பட்டதைப்போல நீயும் ஒரு இடத்தில் பிறந்து வளர்ந்து அங்குள்ளவற்றைத் தழுவி மகிழ்ந்து விட்டு ஒரு சுகமும் இன்றிக் கடலிலே போய்க் கலக்கின்ற வாழ்வுக்கு ஆசைப்பட்டு விட்டாயா என்றான்.

வயத்தணிந் தேகுநின் யாணரிறு நாள்பெற
மாமயி லன்னார் மறையிற் புணர்மைந்தர்
காமங் களவிட்டுக் கைகொள்கற் புற்றென
மல்லற் புனல்வையை மாமலை விட்டிருத்தல்
இல்லத்து நீதனிச் சேறல் இளிவரல்

(பரிபாடல் - வைகை 11)

அந்தப் புலவன் கேட்ட கேள்வி தானே இன்று மேலைத்தேய மானுடரின் பொதுவான வாழ்வியல் கொள்கையாக இருக்கின்றது. விலங்குகள் போல கூடிப் பிரியும் வாழ்வைத் தானே அவர்கள் உகந்தது என்று கொண்டாடி வாழ்கின்றார்கள்.

அதை எமது கலாசாரம் அடியோடு வெறுக்கின்றது. ஆனால் அதை விரும்பி ஆதரித்த சங்க இலக்கியமும் இருந்திருக் - கிறது என்று காட்டுகின்றது பரிபாடல்.

என்னதான் இல்லை எங்கள் தமிழில்?

# விருந்தோம்பல் எனும் உயர் பண்பாடு



பொன்னையா விவேகானந்தன்

## மரபும் மாண்பும் 43

இயற்கையானது, உணவைப் பெறுகின்ற வழிகளைத் தோற்றுவித்த பின்னரே உயிர்களைப் படைத்தது எனலாம். உலகின் முதல் உயிரியாகக் கருதக்கூடிய தாவரத் தோற்றத்துக்கு அடிப்படையே அவற்றின் உணவு எனக் கூறக்கூடிய காற்று, நீர், வெப்பம், மண் எனப்பட்ட புவியின் மூலங்கள்தான். பின்னர் தோன்றிய எல்லா உயிர்களுக்குமான நாள்தோறுமான முதன்மைப் போராட்டம் உணவைப் பெறுவதாகவே இருக்கின்றது.

மனித வாழ்வின் தொடக்கத்தில் ஏற்பட்ட போட்டிகள், பூசல்கள், போர்கள் எல்லாமே பெரிதும் உணவுத் - தேவையையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. பசியும் வயிறும் எல்லோருக்கும் இருந்தன. எனினும் வல்லமை மிக்கவராலேயே பசியைப் பெரிதும் போக்க முடிந்தது. வலிமையில் குறைந்தோர், தமது பசியைப் போக்க வல்லோரிலேயே தங்கியிருக்கவேண்டியிருந்தது. தமக்காகவும் தம்மைச் சார்ந்தவர்களின் பசிக்காகவும் போராடத் தொடங்கியவர்களே பின்னாளில் தலைவர் - களாக உருவாகினர் எனலாம்.

முற்காலத்தில் பணப்புழக்கம் இல்லை. பண்டமாற்று முறைகள்தான் இருந்தன. பொதுவிடங்களில் உணவகங்கள் பெருமளவில் இருக்க வாய்ப்பில்லை. போக்குவரத்து வசதிகளும் இல்லை. பெரும்பாலானோர் கால்நடையாகவே ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்துக்குச் சென்றனர். பொது உணவு விடுதிகள் அப்போது இல்லை சத்திரங்களும் ஊரார் வீடுகளும்தான் இருந்தன. பயணம் செய்வோர் உணவுக்கும் தங்குவதற்கும் பெரிதும் கடக்கும் ஊர்களில் வாழும் மக்களையே நம்பியிருந்தனர். ஊராரும் இவ்வாறு பயணிகள் வருவார்கள் என்றே காத்திருப்பர். விருந்தோம்பல் என்ற பண்பாடு உயர்நிலை பெறுவதற்கு இதுவும் ஒரு காரணம் என்கின்றார் பேராசிரியர் பி. சேதுராமன்.

அக்காலத்து வீடுகளில் திண்ணை என்ற அமைப்பு இருப்பதை இப்போதும் காணலாம். அங்கு ஒரு தண்ணீர்ப் பானையும் இருக்கும். இது பயணிகள், விருந்தினருக்காக உருவான இல்ல வடிவமைப்பு.

தமிழர் பசியைப் பசிப்பிணி என்றே குறிப்பிட்டனர். அதாவது பசி உயிர்களோடு உடன் பிறந்த நோய். நாள் தோறும் ஏற்படும் நோய். உண்டால் மட்டுமே தீரக்கூடிய நோய்.

பசிக்கும் வயிறு பற்றி ஔவையார் எழுதிய நல்வழிப் பாடல் ஒன்று பசிப்பிணியின் பண்பை தெளிவாக உரைக்க வல்லது.

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய் - ஒருநாளும்
என்நோ வறியாய் இடும்பைகூர் என் வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. (11)

என் வயிறே! இன்று உணவு கிடைக்கவில்லை. இன்று ஒரு நாளைக்கு மட்டும் சாப்பிடாமல் இரு என்று சொன்னால் இருக்கமாட்டேன் என்கிறாய். வயிற்றுப் பசி கிள்ளுகிறது. இன்று நிறைய உணவு கிடைத்திருக்கிறது. இரண்டு நாளைக்குச் சாப்பிட்டுக் கொள் என்று சொன்னாலும் சாப்பிடமாட்டேன் என்கிறாய். உணவுக்காக நான் போராடும் துன்பம் உணவுக்குத் தெரியவில்லை. உடம்புத் துன்பத்தை அதிகமாக்கிக் - கொண்டே இருக்கிறாய். துன்பம் தருகின்ற வயிறே, உன்னோடு கூடி வாழ்தல் மிகத் துன்பமாக இருக்கின்றது.

உணவே உயிர்களின் தலையான தேவை. பசித்தவோர் உயிருக்கு உணவு கொடுத்தலே உலகின் தலையான அறச்செயல் என்பர். உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் என்கின்றது முதுமொழிக்காஞ்சி என்ற இலக்கியம்.

மணிமேகலை என்ற இலக்கியம் அறம் எனப்படுவது யாது எனக் கேட்பீர்களாயின் அது மன்னுயிர்களுக்கெல்லாம் உண்டியும் உடையும் இருப்பிடமும் கொடுப்பதே என்கிறது.

“அறம் எனப்படுவது யாது எனக்கேட்பின்
மறவாது இதுகேள் மண் உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டது இல்” - (மணிமேகலை. 25.288-291)

என்றவாறு உணர்த்தப்பட்டுள்ளது.

பிறவுயிர்க்கு உணவளித்தல் தொடர்பில் தனியொரு அதிகாரத்தையே வகுத்து, தமிழரின் விருந்தோம்பல் பண்பை உலகறியச் செய்தவர் திருவள்ளுவர்.

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு” - (குறள். 81)

உழவரின் வேளாண்மைத் தொழிலின் முதன்மைச் சிறப்பு விருந்தினரை வரவேற்று உணவிடுதல் என்கின்றார் வள்ளுவர். மாந்தர் மறுபிறப்புக்குத் தேவையான புண்ணியங்களை இப்பிறவியில் சேர்த்து வைக்க விரும்பினால் அதற்கு உகந்த இடம் பசித்தவன் வயிறே என மற்றுமொரு குறளில் குறிப்பிடுகின்றார்.

தமிழர், வரலாறு தோற்றம் கொண்ட காலந்தொட்டே பிறவுயிர்களின் பசியைப் போக்கும் உயரிய பண்பு கொண்டவராகத் திகழ்ந்திருக்கின்றனர். ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கருதப்படும் தொல்காப்பியம் தலைமக்கள் கடமை என முதன்மைப்படுத்துபவனவற்றில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெறுகின்றது.

‘..விருந்துபுறந் தருலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்’- (தொல்.பொருள்.களவு 11:3-4)

விருந்து என்ற சொல் பழம்பெரும் இலக்கணமான தொல்காப்பியத்தில் பலவிடங்களில் விரவி வருகின்றது. தொல்காப்பியர் இலக்கியத்தின் எட்டு அழகுகளைப் பட்டியலிடும்போது விருந்து என்பதையும் ஒரு வனப்பாகக் குறிப்பிடுகின்றார்.

‘விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே’ (செய். 231)

அதாவது முன்னைய ஆசிரியர்கள் சொல்லிய வழியினின்றும் விலகிப்போய் புதியதாகப் படைக்கப்பட்ட இலக்கியம் விருந்து எனப்படும் என்பது பொருளாகும்.

காலத்திற்குக் காலம் செய்யுள் வடிவில் மாற்றங்கள் நேரலாம். தமிழ்மொழி வளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்களும் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கருதியே தொல்காப்பியர்‘விருந்து’ என்ற வனப்பைக் கூறினார் என்றால் தவறில்லை.

அதேவேளையில் பொருளதிகாரத்தில் வீட்டுக்குப் புதிதாக வருவோரையும் விருந்து என்ற சொல்லால் குறிப்பிடுவதை மேலே பார்த்தோம். இச்சொற் பயன்பாட்டின் பிற்கால வளர்ச்சியே நல்ல உணவையும் வீட்டிற்கு வருவோரையும் குறிப்பதற்கு ஒரே சொல்லாக விருந்து எனத் திகழ்ந்தது.



கனடா மூர்த்தி

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 10

கவனிப்பாரற்றுக் காணப்பட்ட கில்மிஷா இந்தியாவின் ‘ஸீ’ தமிழ் தொலைக்காட்சியில் தோன்றிய பின்னர் ஈழத்தமிழரின் பலத்த கவனிப்புக்கு வந்ததை சென்ற இதழ் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். ஈழத்தவரான பாலு மகேந்திராகூட இந்தியா செல்லாமல் இருந்திருந்தால் தனது திறமை தனது சமூகத்தால் அங்கீகரிக்கப்படுமா என்ற ஏக்கத்துடன்தான் வாழ்நாளை கழித்திருப்பாரோ தெரியாது. தப்பித்தவறி பாலுமகேந்திரா புலம்பெயர்ந்து கனடாவில் வாழ நேர்ந்திருந்தால் திருமண வீடியோ எடுக்குமொரு ஒளிப்பதிவாளர் நிலைக்கு அவரை நாம் தள்ளிவிட்டிருப்போம்.

ஆக, “ஒரு ஈழத்துக் கலைஞர் தமிழ்நாட்டில் புகழ்பெறாமல் ஈழத்தமிழ் மக்களிடம் அங்கீகாரம் பெற்றுவிட முடியுமா, முடியாதா?” என்ற கேள்விக்கு முடியாது என்றுதான் பலரும் சொல்கிறார்கள். “தமிழகத்தில் புகழ் கிடைத்தால் மட்டுமே நம்மவரை நாம் கொண்டாடும் நிலை நம் மத்தியில் ஏற்படும்” என்று அவர்கள் வாதிடுகிறார்கள். ஆனால் எனக்கென்னவோ அந்த வாதம் முற்றிலும் சரியானதாகத் தென்படுவதாயில்லை.

ஒலிபரப்பாளர் அப்துல் ஹமீதுக்கு தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் அளப்பெரும் கொண்டாட்ட மதிப்பு இருக்கிறது. ஆனால் ஈழத்தமிழர்களாக நாம் நமது அப்துல் ஹமீதைக் கொண்டாடுகிறோமா? இல்லையல்லவா.. அதுபோல தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டுவரும் எழுத்தாளர் அ.முத்துலிங்கம் நமது ஈழத்தமிழர்கள் மத்தியில் பெரிதும் அறியப்படாதவராக இருப்பதும், சில அபத்தங்கள் அவரை விமர்சிப்பதுமான வினோத நிலைமையும் நம்மிடையே உண்டல்லவா. ஆக ஈழத்தமிழரிடையே ஒருவர் புகழ் பெறவேண்டுமானால் தமிழகத்தில் அங்கீகாரம், புகழ் கிடைத்திருப்பது மட்டும் போதாது என்பது இதன்வழி நிறுவப்படுகிறது.

சரி.. தமிழகம் போய் காற்று வாங்கி, பிறகு கவிதை வாங்கிவர வேண்டாம். ஈழத்தமிழரிடையே மட்டும் தனித்து நின்று கலைப்பணி புரிந்து எப்படித்தான் புகழ் பெறுவது என்ற கேள்வியொன்று எழுகிறதல்லவா. அதற்கு எனக்குத் தெரிந்த பதில்களில் ஒன்றைச் சொல்லட்டுமா? “மிகச் சாதாரண அளவீடுகளுக்கிடையே ஒரு கலைஞன் தன் கலைத்திறனை வெளிக்காட்டும்போதுதான் ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையோரின் மனதில் இடம் கிடைக்கும்” என்கிறேன் நான். அதையே விளக்கமாகச் சொன்னால், சக்கடத்தார், அடங்காப்பிடாரி, அண்ணை ரைற், படலைக்குப் படலை போன்ற வழக்கொழிந்துபோன யாழ்ப்பாணப் பேச்சுவழக்கோடு வரும் கல்லாநிதி வகையறா நகைச்சுவைகளைத்தான் காவியங்கள்போலக் கருதிக் கொண்டாடும் ரசனையுடன் நம்மில் பெரும்பான்மையோர் இருக்கிறோம். அந்த வகை ரசனையை பூர்த்தி செய்துபார்.. சனம் தன்னாலே பின்னால் வரும்.

அந்த உண்மை ஒருபுறமிருக்க, ஒரு பொய்யையும் பலகாலமாக நம்மில் பலரும் தொடர்ந்து சொல்கிறார்கள். “ஈழத்தமிழரின் ரசிகத்தன்மை மிகவும் உயர்நிலைப்பட்டது” என்ற பொய்தான் அது. ஒருவரது ரசிகத்தன்மையானது அவர் கொண்டிருக்கும் சமூக சிந்தனைகளிலிருந்தும் கண்ணோட்டங்களிலிருந்தும்தான் பிறக்கிறது என்பதை நாமறிவோம். அப்படியிருக்க நமது ரசிகத்தன்மை உயர்நிலைப்பட்டது என்றால் நமது சமூக சிந்தனைகளும், சமூகக் கண்ணோட்டங்களும் தனித்துவமாகவும், மிகவும் உயர்நிலைப்பட்டவையாகவுமன்றோ இருக்க வேண்டும். அவை அப்படியா இருந்திருக்கின்றன?

ஒரு புரிதலுக்காக வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், 1960களிலிருந்தே வெகுஜன ஊடகமான இலங்கை வானொலி வர்த்தக சேவையும், தமிழ்த் திரைப்பட அரங்குகளும் கூட்டுச் சேர்ந்து ஈழத்தமிழ் சமூக மனிதனின் மனவளர்ச்சியை அவனுக்கே தெரியாமல் தமிழ் சினிமாவிற்குள் மட்டுமே இருக்குமாறு இறுகக் கட்டி வைத்திருக்கின்றன. ஆயுத இயக்கங்கள் ஆளுகைக்கு வந்தபின் சமூகத்தை வேறுபாதையில் அழைத்துச் செல்வதற்கான பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டன என்பது உண்மைதான். அதெல்லாம் இன்று காலாவதியாகிய கனவாகிவிட்டது. அதனால்தான் இயக்க காலத்தில் அமைதியாக உறைந்திருந்த தமிழ் சினிமா மோகம் இன்று திரையரங்குகளையும் தாண்டி தொலைக்காட்சி ஊடாகவும், கைத் தொலைபேசிகள் ஊடாகவும் ஒருவகைப் பூதாகரமான தாக்கத்தை ஈழத்தமிழரிடம் செய்து வருகிறது. சினிமா என்பது ஆரோக்கியமானதொரு ஊடகம்தான் என்றாலும் தமிழகத்தின் தமிழ் சினிமா நம்மவர்க்குத் தரும் குழந்தைத்தனமான மோகம் ஈழநிலப்பரப்பின் கலாசார விழுமியங்களை, அறிவுசார் செயல்பாடுகளை, ஈழத்தமிழருக்கான தனித்துவத்தைத் தேடும் கலைஞர்களை மறைத்து நிற்கிறது.

அதன் தொடர்ச்சிதானோ என்னவோ, “கலைஞர்களைக் கொண்டாட வேண்டுமா? ஈழத்தமிழ்க் கலைஞர்கள் நமக்கெதற்கு? நேரடியாகத் தமிழக சினிமா, தொலைக்காட்சிக் கலைஞர்களையே கொண்டாடிவிடுவோம்!” என்ற நினைப்பும், போக்கும் - புலம்பெயர் தமிழர்களிடம் நிறைந்திருப்பதுபோல - இன்றைய யாழ்ப்பாணத்து மக்களிடமும் வந்துவிட்டது. அதற்கு நல்ல உதாரணம் சமீபத்தில் யாழ்ப்பாணம் கண்டதொரு பெருமேடை இசை நிகழ்ச்சி.

அந்த இசை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர் ஒரு தமிழ்க் கனடியர். கனடாவில் சமூகம்சார்ந்த விடயங்கள் எதிலும் ஈடுபட்டவராக அவர் என்றும் அறியப்பட்டவரல்லர். தமிழகத்தில் பிஸ்னஸ் செய்கிறார் என்கிறார்கள். நல்லது. தமிழக சினிமா நடிகையை மணம் புரிந்த அவர், தமிழ் சினிமா சார்ந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சியொன்றை நடத்துவதில் யாருக்கும் மாற்றுக் கருத்துமில்லை. ஆனால், தனியார் பல்கலைக்கழகம் போன்றதொன்றை நோர்தேர்ன் யுனி என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் அமைக்கும் திட்டத்தோடு சென்றிருப்பவரல்லவா அவர். தனது யுனியைப் பிரபலப்படுத்துவதற்கு உடனடிக் குறுக்குவழியாக, இந்திரலோகம் போன்றதொரு பெரும் மேடையில், ரம்பையர் குத்தாட்டம் போடுமாறு செய்யப்படும் இலவச பொழுதுபோக்கு நிகழ்ச்சிதான் சரியானதென்று தீர்மானித்தாரே அங்குதான் சிக்கல் வருகிறது. அந்த நிகழ்ச்சி யாழ்ப்பாண வரலாறு இதுவரை கண்டிராத வெட்கக்கேடான குழப்பத்தோடு முடிந்தது. ஆக, அவரது பல்கலைப் பிரபலப்படுத்தல் பொறிமுறையானது கடைசியில் ‘கல்வியா செல்வமா வீரமா’ என்ற விவாதத்திற்குத்தான் இன்று சமூகத்தைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

நிகழ்ச்சிக்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் எதிர்பாராமல் வந்திருந்தமைதான் பல பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணம் என்ற விளக்கமும் அவர் தரப்பில் சொல்லப்படுகிறது.

அட.. அப்படியானதொரு பெரிய நிகழ்ச்சியை ஒரு வணிகமாக ஆராய்ந்து திட்டமிட முடியாத அளவு அறிவுடன் செயல்பட்ட அவருக்கு, வணிகம் உட்பட பல துறைகளில் பட்டப்படிப்புத் தரப்போகும் ஓர் உயர் கல்விநிலையத்தை அமைத்துத் தருமளவிற்கு என்ன அறிவு, தகுதி இருக்கின்றன என்றதொரு கேள்வியல்லவா இப்போது மனதில் தோன்றுகிறது.

(அடுத்த இதழில் மிகுதி)

அ. முத்துலிங்கம்



# மோசமான விடைபெறுதல்

**(லாரி டேவிட் என்பவர் எழுதியதின் சுருக்கமான மொழியாக்கம்)**

1942ம் ஆண்டு, ஜூன் 25. நான் போருக்குப் புறப்பட்ட நாள். உயர்நிலை பள்ளியில் படித்த காலத்திலிருந்து காதலித்த அலிஸ் என்னை காரில் ரயில் ஸ்டேசனுக்கு அழைத்துச் சென்றாள். அவளிடமிருந்து விடைபெறுவதுதான் என் நோக்கம். நாங்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவது என்பதை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று.

அலிஸ் காரை நிறுத்தியதும் நாங்கள் இறங்கி ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு மௌனமாக ஸ்டேசனுக்குள் நுழைந்தோம். எங்களுடைய இதயங்கள் வெடிப்பதற்கு தயாராக இருந்தன. அங்கே அவள் பேசியதை என்னால் இன்றுகூட வார்த்தைக்கு வார்த்தை நினைவுகூரமுடியும்.

‘சத்தியம் செய்துகொடு, நீ என்னிடம் திரும்ப வருவாய் என்று.’

‘சத்தியம்.’

‘நீ எனக்கு எழுதுவாய் என்று சத்தியம் செய்துகொடு.’

‘அதிலென்ன சந்தேகம். நான் எழுதுவேன்.’

‘ஒவ்வொரு நாளும்.‘

‘ஒவ்வொரு நாளுமா? நிச்சயம் முயற்சி செய்வேன். உனக்குத் தெரியும்தானே நான் யுத்த முனையில் மும்முரமாக இருப்பேன். நிச்சயமாக நேரம் கிடைக்கும்போது எழுதுவேன்.’

‘என் சிநேகிதிக்கு பிரட் ஒவ்வொரு நாளும் எழுதுகிறானே.’

‘அப்படியா? அவன் ராணுவத்தில் பெரிய அதிகாரிக்கு உதவியாளன். அவனுக்கு ஒரு மேசை இருக்கிறது. நானோ போர்முனையில் இருப்பேன். எனக்கு கடிதம் எழுதுவதற்கு எங்கேயிருந்து பேப்பர் கிடைக்கும்?’

‘நான் பேப்பர் கட்டை காவச் சொல்கிறேனா? ஒரு சில வெறும் பேப்பருக்குகூட நான் தகுதியானவள் இல்லையா?’

‘ஒரு சில வெறும் பேப்பருக்கு நிச்சயம் தகுதியானவள்தான். நீ எல்லாவற்றையும் தவறாக விளங்கிக் கொள்கிறாய். யன்னல் கண்ணாடியில் தெரிந்த என்னுடைய ராணுவச் சீருடை பார்ப்பதற்கு கம்பீரமாகத்தான் இருந்தது.

‘ஒரு பேனையாவது உன்னுடைய முதுகுப்பையில் இருக்கிறதா?’

‘பேனை இருக்கிறது. எழுதும்போது இடைக்கிடை மை காய்ந்துவிடுகிறது. முதல் கடிதம் எழுதும்போதே மை முடிந்துபோகக்கூடிய சாத்தியம் இருக்கிறது.’

’சரி, இன்னொரு பேனை எடுத்துக்கொள். பல பேனைகள் கொண்டு போனாலும் நல்லதுதான்.’

‘நிச்சயமில்லை. போர்முனையில் பேனைகள் விற்பார்களா? சொல்வதற்கில்லை. உனக்கு தெரியும்தானே. எனக்கும் பேனைகளுக்குமான உறவு பற்றி. என்னுடைய சட்டையிலிருந்து அவை விழுந்தபடியே இருக்கும்.’

இப்படிச் சொல்லிக்கொண்டே வட்டமான இனிப்பை விடைபெறும் முத்தத்துக்கு தயார் செய்யும் விதமாக வாய்க்குள் எறிந்தேன். அவள் என்னை விநோதமாகப் பார்த்தாள்.

‘இது என்ன பார்வை?’

‘உனக்கு எழுத விருப்பமே இல்லை என்பது தெரிகிறது.’

‘அலிஸ், நான் போர்க்களத்துக்கு போனவுடன் இதுபற்றி தீவிரமாகச் சிந்திப்பேன். எனக்கும் எழுத ஆர்வம்தான். ஆனால் பிரச்சனை என்னவென்றால்;.’

‘எனக்குத் தெரியும். பேப்பரும், பேனையும்.’

‘சரி, அத்துடன் கால நேரம். நான் பகல் முழுக்க போர் முனையில் எதிரிகளை கொன்று குவித்துக் கொண்டே இருப்பேன். எதிரிகளின் துப்பாக்கி என்னை நோக்கிச் சுடலாம். என்னுடைய சக ராணுவத்தினரையும் நான் காப்பாற்ற வேண்டி நேரலாம். தண்ணீர் குடுவையில் உள்ள தண்ணீர் முடிந்து போகலாம்.’

’நாள் முடிவில் நான் கூடாரத்துக்கு களைத்துப்போய், ஊத்தையாகத் திரும்பும்போது என் முதல் எண்ணம், தகரடப்பாவில் வரும் உணவைச் சாப்பிட்டு ஓய்வெடுப்பதுதான்.’

‘தகர டப்பா உணவு என்றால் என்னவென்று எனக்குத் தெரியும்.’

‘தகரடப்பா உணவுக்குப் பின்னர் ஒரு குளியல் பற்றி சிந்திக்கவேண்டி இருக்கும். இதுவெல்லாம் முடிந்த பின்னர் என் கையில் பேப்பரும், பென்சிலும் கிடைத்தால் நிச்சயம் எழுதுவேன். ஆனால் அநேகமாக அப்போது இருட்டாக இருக்கும். அப்பொழுது எழுதுவது எத்தனை கடினமான காரியம் என்று உனக்குத் தெரியும்.’

‘ஓகே. போதும். போதும். நீ எனக்கு எழுதவே வேண்டாம்.’

நான் ரயிலில் ஏறியாகவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது. ஆனால் இப்படி மனக்குழப்பத்துடன் விடைபெற எனக்கு விருப்பமில்லை. தயங்கினேன்.

‘கடவுளே! நீ உண்மையில் விசயங்களை திருப்பிவிடுகிறாய். என்னால் நம்பவே முடியவில்லை. என்னுடைய உயிரையே என் தாய்நாட்டுக்காக தியாகம் செய்ய நான் முன்வந்திருக்கிறேன். நீ என்னவென்றால் ஒரு பேப்பரும் பேனையும் சம்பாதித்து உனக்கு நான் ஒரு நீண்ட கடிதம் எழுதவேண்டும் என எதிர்பார்க்கிறாய். எனக்கு வாத்தியார் வீட்டுப்பாடம் செய்யச் சொல்லி கட்டளையிட்டது போல இருக்கிறது.’

என்னுடைய பையை தூக்கினேன். ‘சரி, நான் புறப்படவேண்டும்.’ பிரிவு முத்தத்திற்காக தலையை குனிந்தேன். பாம்பு கொத்த வந்ததுபோல அவள் பின்னால் தலையை இழுத்தாள். சற்றும் எதிர்பாராத இந்த நடவடிக்கையால் நசுங்கிப்போய் தலையை ஆட்டிவிட்டு ரயிலுக்குள் ஏறினேன். உள்ளே உட்கார்ந்தபின் வெளியே தலையை நீட்டினேன்.

( 30ம் பக்கம் வருக )



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 71

## தலைமைத்துவப் பண்பு

கிரேக்கமாவீரன் மகா அலெக்ஸாண்டரால் ஒரு சிறுபடையின் உதவியுடன் எவ்வாறு பேரரசுகளை வீழ்த்தி பலநாடுகளையும் கைப்பற்ற முடிந்தது என்னும் கேள்விக்கு வரலாற்று ஆசிரியர்கள் விடைகாண முற்பட்டது உண்டு. அவர்கள் கண்ட - றிந்த காரணங்களுள் ஒன்று அலெக்ஸாண்டரின் தலைமைத்துவப் பண்பாகும். எதிரிகளின் படைகள் எண்ணிக்கையில் பலமடங்கு பெரிதாக இருந்தபோதும்கூட அலெக்ஸாண்டர் ஈட்டிய வெற்றிகள் வரலாற்றில் இடம்பெற்றவை.

போரின் முன்னணியில் தானே நின்று தனது துருப்புகளை வழிநடத்தவேண்டும் என்று அலெக்ஸாண்டெர் எப்போதும் வலியுறுத்தியதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கடுமையான போர்களிலும் தானே படையின் முன்வரிசையில் நின்று படையினரை வழிநடத்தியதன் மூலம் அவரது வீரர்கள் மற்றும் தளபதிகளின் மரியாதையையும் ஆதரவையும் அவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

அலெக்ஸாண்டரின் இந்தத் தலைமைத்துவப் பண்பு குறித்து சங்ககாலத்துப்புலவர் ஒருவர் தமது சமகால யவனவீரர்களிடம் இருந்து கேட்டறிந்திருக்கமுடியுமா என்னும் கேள்வி காரிக்கண்ணன் என்னும் புலவரின் புறநானூற்றுப் பாடலைப் படிக்கும்போது எவருக்கும் தோன்ற இடமுண்டு.

பிட்டங்கொற்றன் என்பவன் சேரமான் கோதையின் படைத்தளபதி. இவனைப் பாடிப் பரிசில் பெற ஆசைப்படுகின்றார் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணன் என்னும் புலவர். ஆனால் எவ்வளவோ முயன்றும் பிட்டங்கொற்றனை நேரில் சந்திப்பது என்பது அவருக்கு மிகக் கடினமாக இருக்கின்றது. இவனை எப்போது நேரில் சந்திக்க முடியம் என்று ஏங்கும் காரிக்கண்ணன் பிட்டங்கொற்றனிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றார்.

நும்படை செல்லுங் காலை யவர்படை
எடுத்தெறி தானை முன்னரை யெனாஅ
அவர்படை வரூஉங் காலை நும்படைக்
கூழை தாங்கிய வகல்யாற்றுக்
குன்றுவிலங்கு சிறையி னின்றனை யெனாஅ
அரிதாற் பெருமநின் செவ்வி யென்றும்
பெரிதா லத்தையென் கடும்பின் திடும்பை
இன்னே விடுமதி பரிசில் வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலின் ரெறிந்த வகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்
பொருநர்க் குலையாநின் வலன்வா ழியவே

- புறநானூறு 169

“எதிரிப்படையைத் தாக்கும்போது உனது படையணியின் முன் நிற்கின்றாய். எதிரிகள் படையெடுத்து வரும்போது அவர்கள் உனது படைவீரர்களை அண்டாமல் ஆற்றின் குறுக்கே நிற்கும் கல்லணை போன்று இருபடைகளுக்கும் நடுவில் நிற்கின்றாய். பெருமகனே! உன்னை நேர்காணல் என்பது நடப்பதற்கில்லை. எனது சுற்றமோ வறுமையில் வாடுகின்றது. இனியும் தாமதிக்காது இன்றே ஏதாவது கொடுத்து என்னை அனுப்பிவிடு. இளவயதுக் கோசர் ஆயுதப்பயிற்சி செய்யும்போது வேல் எறிந்து பழகும் இலக்கான அகன்ற இலைகொண்ட முருக்கமரத்தின் பெருந்தூண் போல் நிற்கும் வெல்லப்படாத உன்வீரம் வாழ்க” என்னும் பொருள் தரும் சங்கப்பாடலிது.

## Leadership qualities

Historians are grappling with the question of how the Greek hero, Alexander the Great, managed to defeat empires and conquer numerous countries with a comparatively small army. One key factor they have identified is Alexander's exceptional leadership qualities. Despite facing enemy forces significantly outnumbering his own, Alexander's triumphs are etched in history. Historians emphasize that Alexander consistently positioned himself at the forefront of battles, leading his troops. By doing so even in the most intense and challenging conflicts he garnered the respect and support of both soldiers and commanders.

When exploring the poetry of Karikkannan, a resident of the ancient port city of Kaveripoompattinam (Poompuhar), one might contemplate whether this poet from the Sangam era was influenced by tales of Alexander's leadership. This raises the question of whether the poet Karikkannan could have encountered the leadership qualities of Alexander through contemporary Greek soldiers enlisted by the king to safeguard the city.

Karikkannan fervently longs to meet Pittankottran, the esteemed commander of Cheraman Kothai, seeking acknowledgment and gifts in recognition of his poetic prowess. However, despite persistent efforts, encountering Pittankottran in person proves to be a formidable challenge due to the elusive nature of the commander.

Consequently, the poet humbly entreats the commander, stating, "My Lord, in the heat of battle, you place yourself on the frontline, leading the attack. During times of invasion, you position yourself at the forefront, akin to a stone dam obstructing the river, preventing the enemy from reaching your soldiers. Unfortunately, I have been unable to meet you in person. My relatives are burdened by poverty. I implore you not to prolong this any further; kindly bestow upon me a token today and allow me to depart. May your indomitable courage endure, resembling the unyielding pillar of the broad-leafed Murukkam tree—a target for the young Kosars honing their spear-throwing skills during training."

- Puranaruru 169

---

## பிரித்தானிய பிரதமர் வாரத்துக்கு 36 மணிநேரம் விரதம்

பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் வாரத்துக்கு 36 மணிநேரம் கடுமையான விரதம் ஒன்றைக் கடைப்பிடிப்பதாக அவரது நண்பர்கள் தெரிவித்துள்ளனர். திங்கட்கிழமை முழுவதும் எதுவும் சாப்பிடாமலும் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஐந்து மணிமுதல் செவ்வாய்க்கிழமை காலை ஐந்து மணிவரை விரதம் இருக்கிறார். இந்திய வம்சாவளியினரான இந்துவான ரிஷி சுனக் விரத நேரத்தில் தண்ணீர் அல்லது பால் சேர்க்காத கோப்பி மட்டும் அருந்துவதாகவும் இது அவரது உடலையும் மனதையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க உதவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## அதிரனின் நயனவழி

05

# நெரிசல், இரைச்சல் நகரம்

ரொறன்ரோவுக்கு ‘நெரிசல் நகரம்’ என்ற புதிய நாமத்தை கனடாவின் ஆங்கிலத் தினசரி ஒன்று சூட்டியுள்ளது. அதிகளவான வாகனங்களின் போக்குவரத்தினால் ஏற்பட்டுள்ள இடைஞ்சலை குறிக்கும் வகையில் இந்தப் பெயரே ரொறன்ரோவுக்குப் பொருத்தம் என தெரிவித்துள்ள அந்தப் பத்திரிகை இரைச்சல் கூடிய (வாகனங்களின்) நகரமாகவும் ரொறன்ரோவை சுட்டியுள்ளது.

அளவுக்கதிகமான சகல வகை வாகனங்களும் ரொறன்ரோவை மையப்படுத்தி ஓடுவதால் ஏற்பட்ட நெரிசலைவிட தற்போது ஈருருளி (சைக்கிள்) படையெடுப்பு மேலும் போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்தி விபத்துகளையும் அதிகரிக்கச் செய்து வருகிறது. பகல் வேளைகளில் இரண்டு சந்திகளுக்கு இடைப்பட்ட தூரத்தைக் கடக்க பதினைந்து இருபது நிமிடங்களுக்கு மேல் எடுப்பதாகவும், விபத்துகள் சாதாரண நிகழ்வாகி விட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

வீதிகளின் ஒருபுறத்தில் வாகன தரிப்பிடம், ஈருருளி ஓட்டுவதற்கான தனிப்பாதை அமைப்பு என்பவற்றினால் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக வாகன ஓட்டுனர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த நிலைமை மேலும் மேலும் நீடித்துக் கொண்டிருக்கையில் வீதி விபத்துகளை தடுப்பதற்காக பொலிசாரின் சட்ட நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. ரொறன்ரோ நகரசபை தனது வருமானத்தை வருடமொன்றுக்கு சுமார் அறுபது மில்லியனுக்கு அதிகரிப்பதற்காக வாகன தரிப்பிடத்துடன் சம்பந்தப்பட்ட தண்டப் பணத்தொகையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. அநேகமாக இந்த அதிகரிப்பு ஆகஸ்ட் மாதமளவில் நடைமுறைக்கு வரக்கூடும்.

வேகமாக வாகனங்களை ஓட்டுதல், மதுபோதையில் ஓட்டுதல், கவனயீனமாக ஓட்டுதல் போன்றவைகள்



தொடர்பாக சராசரியாக வாரமொன்றுக்கு ஆயிரம் வரையான வாகன ஓட்டுனர்கள் ரிக்கற் பெறுகின்றனர். முக்கியமாக தானியங்கிக் கமராக்கள் கூடுதலானவர்களை சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கிறது.

வீதிச் சோதனைகளில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிசார் சட்டமீறல் சாரதிகள் தொடர்பாக வெளியிட்டுள்ள சில தகவல்கள் சுவாரஸ்யமானவை:

50 கிலோமீற்றர் வேகத்தில் ஓட வேண்டிய வீதியில் 191 கிலோமீற்றர் வேகத்தில் வாகனத்தை ஓட்டிய 18 வயது இளைஞன் கூறிய காரணம், “திரைப்படக் காட்சிக்கு நேரம் பிந்திவிட்டது” என்பது.

தனது இரண்டு இளைய சகோதரர்களை ஏற்றியவாறு மும்மடங்கு வேகத்தில் வாகனத்தை ஓட்டிச் சென்ற ஒருவரை பொலிசார் மறித்தபோது அவர் கூறியது, “குடும்ப விவகாரம் சம்பந்தமாக உடனடியாக வருமாறு அழைக்கப்பட்டேன்” என்பது.



40 கிலோமீற்றர் வேக வீதியில் 130 கிலோமீற்றர் வேகத்தில் சிவப்பு விளக்கில் நிற்பாட்டாது வாகனத்தை ஓட்டிச் சென்றவரை பொலிசார் துரத்திப்பிடித்தபோது அவர் கூறிய காரணம், “கழிவறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் வேகத்தைக் கவனிக்கவில்லை” என்பது.

இவர்கள் கூறிய எந்த ஒரு காரணத்தாலும் பொலிசார் இவர்களுக்கு மன்னிப்பு வழங்கவில்லை. மாறாக, தண்டத்துக்கான ரிக்கற் வழங்கி அவர்களை அனுப்பியுள்ளனர்.

வேகமாக வாகனத்தை ஓட்டிச் சென்று பிடிபடும் அநேகமானவர்களும், “இதுதான் முதந்தடவையாக வேகமாக ஓட்டினேன், மன்னிக்க மாட்டீர்களா?” என்று சொல்வது சாதாரணமாகி விட்டதாம். சம்பந்தப்பட்ட ஓட்டுனரின் விபரங்களை பொலிஸ் வாகனத்தின் கம்பியுட்டரில் பதியும்போது அவருடைய முந்திய வாகன குற்றவிபரங்கள் தெரியவருவதை அவர்கள் அறிந்திருப்பதில்லை என்று பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



ப. ஸ்ரீஸ்கந்தன்

## ஞாபகம் துளிர்க்கிறதே ! 34

# எங்கள் ஊர் ஐயனார்

சிவராத்திரி என்றாலே எனக்கும் என் சிறுவயது நண்பர்களுக்கும் உடனடியாக ஞாபகத்துக்கு வருவது எங்கள் ஊர் ஐயனார் கோயில். ஐம்பது வருடங்களு - க்கு மேலாகியும் அந்த இரவுகளை மீட்டிப் பார்க்கும்போது மனம் குதூகலிக்கிறது.

எனது ஊரான அரியாலை பரப்பளவில் பெரிய பிரதேசம். நாயன்மார்கட்டு, நல்லூர், கச்சேரி, சுண்டுக்குளி, கொழும்புத்துறை என்பன எங்களைச் சுற்றியுள்ளன. அரியாலையின் கிழக்குப் பகுதி அந்நாளில் பெரிதும் அறியப்படாத இடமாக இருந்தது. கண்டி வீதியில் செம்மணியை அண்மித்து கிழக்குப் பக்கமாக உள்ள வீதி கிழக்கு அரியாலையை ஊடறுத்துச் செல்கிறது. ஏறத்தாள ஆறு மைல் நீளமான இந்த வீதியால் செல்லும்போது ஒரு பக்கம் வயல்வெளிகளும் மறுபக்கம் தென்னந்தோட்டங்க - ளுமாக பார்ப்பதற்கு ரம்மியமாக இருக்கும். இத் தோட்டங்கள் கடலைத் தொட்ட வண்ணம் உள்ளன.

இந்த வீதி முடிந்து இரண்டு மைல்கள் நடந்தால் பெருங்கடலைத் தொட்டிருக்கும் மண்முனை வரும். கடலின் மறுபக்கம் கௌதாரிமுனை பூநகரி பிரதேசத்துக்குரியது. குடாநாட்டுக்கும் பூநகரிக்கும் மிகவும் கிட்டிய பாதையாக இது இருந்ததால் அரியாலை முனைக்கும் கௌதாரிமுனைக்குமிடையே பாலம் அமைக்கும் திட்டம் ஒன்று இருந்தது. எனினும் அப்போதைய அரசாங்க அதிபர் கேரதீவு ஊடாக அதனை மாற்றிவிட்டார். விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவம் மீதான தவளைப் பாய்ச்சல் தாக்குதலுக்கு இந்த வீதியையும் கடலையும் பாவித்தமை நினைவு கொள்ளத்தக்கது.

இந்த நீண்ட வீதியின் தொடக்கத்திலும் முடிவிலும் குடியிருப்புகள் இருந்ததால் காலையும் மாலையுமாக இரு தடவைகள் இ.போ.ச. பஸ் வண்டி வந்துபோ - னது. இந்த வண்டியை மாம்பழத்தார் என்ற ஊரவர் செலுத்தினார். வீதியின் பாதி வழியில் கடலை இணைத்தபடி இவருக்குக் காணி இருந்தது. இந்த மாம்பழத்தார் வளவில்தான் எங்கள் ஐயனார் குடிகொண்டிருந்தார். சீமெந்திலான சிறிய மூலஸ் - தானம் மட்டுமே எங்களது பிரபலமான ஐயனார் கோயில். ஐந்து பேர் குளித்தால் தண்ணீர் தீர்ந்துவிடும் அளவான மிகச்சிறிய கிணறு அருகே இருந்தது.

கோயிலில் நின்று பார்த்தால் எங்கும் மணற்கும்பல் - கள் மலைபோல் தெரியும். கோயிலின் முன்பக்கம் இருந்த மலை நூறு அடிக்குமேல் உயர்ந்து நின்றது. அதற்கு சீனிமலை என்று பெயர். வெள்ளைச் சீனிபோல் அழகாக இருந்தது. கால் வைக்கும் இடமெல்லாம் ஈச்ச மரங்களும் நாவல் மரங்களுமாக காடுபோல் காட்சி.

சிவராத்திரி என்றால் நடன நிகழ்ச்சிகள், பாட்டுக் கச்சேரிகள், வாணவேடிக்கை, பக்திப் படங்கள் பார்த்தல் என்று எமது இரவு கழிவதில்லை. பஸ் எடுத்து திருக்கேதீஸ்வரம் போகிற அளவுக்கு வசதிகளும் இருக்கவில்லை. எங்களுக்கு எல்லாமே ஐயனார் கோயில்தான். மாம்பழத்தாரும் அவரது நண்பரான எனது பெரியப்பாவும் சேர்ந்து சிவராத் - திரியை ஐயனாரில் சிறப்பாக செய்தார்கள்.

ஒரு மாலைப்பொழுதில் அரிசி மூடைகள், மரக்கறிகள், கிடாரங்களோடு எங்களையும் ஏற்றிக் கொண்டு செல்லையாவின் ட்ரக்டர் ஐயனாருக்குப் புறப்படும். பிரதான வீதியிலிருந்து கோயிலுக்குச் செல்ல பாதையில்லை. முள்பற்றைகளைக் கிழித்துக் கொண்டு ஒரு குத்துமதிப்பில் ட்ரக்டர் போகும். அந்நாளில் நாங்கள் மேற்கொண்ட ஒரேயொரு உல்லாசப் பயணம் அதுவே. அந்த மகிழ்ச்சிகரமான நாளுக்காக மாதக்கணக்கில் நாங்கள் காத்திருப்போம்.

இரவிரவாக அடுத்த நாள் அன்னதானத்துக்காக சமையல் நடக்கும். விறகுகளும் தென்னம்பாளைகளும் சேர்ப்பது எங்கள் வேலை. பாம்பு இருக்கும் கவனம் என்பார்கள். எவ்வளவு பற்றைகளுக்குள்ளால் நடந்து திரிந்திருப்போம். எவரையும் பாம்பு தீண்டியதில்லை. அதன்பிறகு காலை அன்னதானத்துக்கே கோயில் பக்கம் வருவோம். காடு, மண்மலை, கடல் என்று சுற்றுவோம். பட்டுப்போன வடலி-களைக் கொளுத்துவோம். அது நெருப்புத் துகள்களை கக்கியபடி வாணவேடிக் - கைகள் காட்டும். அந்த வெளிச்சத்தில் கோயில் அழகாக இருக்கும். சீனி மலையின் உச்சியில் நின்றால் கடலும் கடலுக்கு அப்பாலுள்ள வெட்டுக்காடு (பூநகரி) பகுதியும் வடிவாகத் தெரியும். வெட்டுக்காட்டிலும் எங்கள் பரம்பரை இருந்தது. அவர்கள் அங்கிருந்து வள்ளத்தில் தென்னோலைகள் கொண்டு வந்து வியாபாரம் செய்தார்கள்.

இரவு சாப்பிடுவதற்கு எதனையும் எடுத்துச் சென்றோமா என்பது நினைவில் இல்லை. ஆனால், பக்கத்துத் தோட்டங்களிலுள்ள பனம் பாத்திகளிலிருந்து பனங்கிழங்குகளைப் பிடுங்கி சுட்டுச் சாப்பிட்டது நன்றாக நினைவில் உள்ளது. கூடவே கடற்கரையில் பிடித்து வந்த சிறு நண்டுகளையும் சுட்டு உண்போம். சுவையாக இருக்கும். கள்ள இளநீரும் நுங்கும் தாராளமாகக் கிடைத்தன. வழி நெடுகிலும் காணப்பட்ட ஈச்சம்பழங்களும் நாவற்பழங்களும் எமக்கு விருந்தாகின.

இதைவிட முக்கியமான விடயம் இருக்கிறது. அது சிகரட் புகைத்தல். யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்னாலிருந்த யாழ்.ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் சிகரட் மலிவு. சிறுகச் சிறுக காசு சேர்த்து அங்கு கணக்காளராக வேலை செய்த அருளம்பலம் மாமாவுக்கும் தெரியாமல் வாங்கிவந்த 'மற்றஹோன்' சிகரட்டை சீனிமலையின் மறுபக்கத்தில் மறைவாக நின்று ஊதித்தள்ளுவது அலாதியான இன்பம். இவ்வாறு களவு, புலாலுண்ணல், புகைத்தல் என்ற மகாபாவங்களுடன் கழி(ளி)யும் எமது சிவராத்திரி, காலை கடற்குளிப்புடனும் அன்னதானத்துடனும் முடிவுக்கு வரும். பிரதான வீதிக்கு அப்பாலிருந்த தனங்கிளப்புப் பகுதியிலிருந்தும் மக்கள் வந்து அன்னதானத்தில் கலந்து கொண்டார்கள்.

எமது பின்னைய நாட்களில் ஆலயத்துக்கு சிறிய மணிமண்டபமும் கோயில்மணியும் அமைக்கப்பட்டன. கோயிலைச் சுற்றி பூம்புகார் என்ற குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர்.

1993 நவம்பரில் நடந்த பூநகரி இராணுவமுகாம் தாக்குதலுக்கு எமது ஊரவரான பானு தலைமை தாங்கினார். இத்தாக்குதலையடுத்து கிழக்கு அரியாலை வீதி மூடப்பட்டது. வீதியின் இருமருங்கும் இராணுவம் நிலைகொண்டிருந்தது. வயல்வெளிகளில் மனித உடல்கள் வீசப்பட்டன. ஷெல்கள் மரங்களைச் சீவிச் சென்றன. எங்கள் ஊர் காவல் தெய்வம் ஐயனாருக்கு என்ன நடந்தது என்பது நீண்ட நாட்களாகத் தெரியாமல் இருந்தது.

சில வருடங்களுக்கு முன் ஐயனாரைச் சென்று பார்த்தேன். காடுகள் இல்லை. சுற்றியிருந்த மண்மலைகளைக் காணவில்லை. மலைகள் இருந்த இடம் பள்ளமாகி தண்ணீர் தேங்கி நின்றது. இப்பவும் கோயிலில் சிவராத்திரி நடக்கிறதா? விழாவுக்கு தனங்கிளப்பு மக்கள் வருகிறார்களா? வெட்டுக்காட்டுப் பகுதியில் இன்னமும் எமது பரம்பரை வாழ்கிறதா?

எதையும் அறிய முடியவில்லை.

# ஸ்காபரோ ஜெய்சிறீ சீரடி சாய்பாபா மகிமைப் பெருவிழா



ஸ்காபரோவில் எக்லின்ரன் - மிட்லண்ட் சந்திப்புக்கருகில் அமைந்துள்ள ஜெய்சிறீ சீரடி சாய்பாபா வழிபாடு நிலையத்தின் பத்தாவது ஆண்டு மகிமைப் பெருவிழா கடந்த மாதம் ஸ்காபரோ சீன கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் நிறுவனரும் அமைப்பாளருமான திருமதி சசிகலா நரேந்திராவின் நெறிப்படுத்தலில் விழா சிறப்பாக ஏற்பாடாகி - யிருந்தது. சீரடி பாபாவின் மகிமைகளை எடுத்தியம்பும் ஆன்மிக கலை நிகழ்ச்சிகளுடன் பூஜை வழிபாடுகள் நேர்த்தியாக இடம்பெற்றன.














# கலாநிதி த. கலாமணி அணிந்துரைகள் நூல்

கடந்த மாதம் காலமான யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும் இலக்கியவாதியுமான கலாநிதி த.கலாமணி பல்வேறு நூல்களுக்கு எழுதிய அணிந்துரைகளின் தொகுப்பு நூல் வெளிவரவுள்ளது. ஆஸ்திரேலியாவில் 2020ம் ஆண்டு அமரரான யாழ்ப்பாணத்தின் பிரபல மருத்துவர் ப.விக்னேஸ்வராவின் ஈராண்டு நினைவுப் பதிப்பாக இந்நூல் அச்சேறுகிறது. 'ஈழத்தில் மாட்டு வண்டி சவாரியும் தமிழர் மரபும்', 'பள்ளிக்கூடங்கள் கட்டடக்கூடங்கள் அல்ல' ஆகிய இரு நூல்கள் ஏற்கனவே மருத்துவர் விக்னேஸ்வராவின் நினைவாக அவரது குடும்பத்தினரால் வெளியிடப்பட்டன.

# 33வது ஆண்டு விருது விழாவும் மலர் வெளியீடும் ஏப்ரல் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

தமிழர் தகவலின் 33வது ஆண்டு விருது விழாவும், 33வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும் எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், வழமைபோன்று ரொறன்ரோ நகர சபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் இடம்பெறும். அழைக்கப்படும் சுமார் முன்னூறு பேர் மட்டும் விழாவில் பங்குபற்றுவர். இவர்களுக்கான உத்தியோகபூர்வ அழைப்பிதழ் ஏப்ரல் மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விழாவில் பங்குபற்ற விரும்புபவர்கள் 416 920 9250 இலக்கத்தில் தங்கள் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் மார்ச் மாதம் 25ம் திகதிக்கு முன்னராகப் பதிவு செய்தால் தாமதமின்றி தொடர்பு கொள்ளப்படும்.

# 'மருத்துவ கலாநிதி இந்திரகிருஷ்ணன் தினம்' அமெரிக்க ஜோர்ஜியா மாநில அரசு பிரகடனம்

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் வாழ்ந்து வரும் மருத்துவ கலாநிதி இந்திரன் பி. இந்திரகிருஷ்ணனின் பன்முகப் பணிகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஜோர்ஜியா மாநில அரசு 2024 பெப்ரவரி 20ம் திகதியை டாக்டர் இந்திரகிருஷ்னன் தினமாக பிரகடனம் செய்து அதற்கான பட்டயத்தை அவரிடம் கையளித்து பெருமைப்படுத்தியுள்ளது.



யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டம் பெற்ற இவர் அட்லான்டா மாநிலத்தின் உள்ளக உடற்கூற்று குடலியல் துறையில் பயிற்சிக்கான நிறுவனத்தை நடத்தி வருவதுடன் எமோரி பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் Adjunct Professor ஆக பணியாற்றி வருகிறார். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் தேசிய மருத்துவ அமைப்புகளில் உயர்நிலை அங்கத்தவராகவும், சர்வதேச ஆலோசனைக் குழுக்கள் சில - வற்றில் தேசிய ரீதியிலும் இவர் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயலாற்றி வருகிறார்.

குடல் புற்றுநோயைத் தடுப்பது பற்றிய ஆய்வுகளின் முன்னோடியாக 2016ம் ஆண்டில் அப்போதைய மாநில ஆளுனரால் ஜோர்ஜியா சுகாதார பணிப்பாளர் மன்ற ஆளுனரின் தனிப்பட்ட அங்கத்தவராக இவர் நியமனம் பெற்றவர். ஜோர்ஜியா மாநிலத்தின் சட்டமன்ற வரலாற்றில் முதன்முறையாக ஆசிய பரம்பரையைச் சேர்ந்த அமெரிக்கர் ஒருவர் பெயரில் ஒரு தினம் பிரகடனம் செய்யப்பட்டதால் உலகளாவிய தமிழர் சமூகம் பெருமைப்படுகிறது. 2020ம் ஆண்டு ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபாபீடத்தில் இடம்பெற்ற 'தமிழர் தகவல்' விழாவில் டாக்டர் இந்திரகிருஷ்ணன் வாழ்நாள் சாதனையாளர் விருதுடன் தங்கப்பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டவர்.


2024 பெப்ரவரி 20ம் திகதியை டாக்டர் இந்திரகுமார் தினமாக பிரகடனம் செய்த பட்டயத்தில் இவரது சிறப்புகளைக் குறிப் - பிடும் பந்தியில் பின்வரும் வாசகங்களும் அடங்கியுள்ளன:

"Dr. Indrakrishnan has received numerous awards from local, national and international organisations for his service and achievements, including the Tamil American Pioneer Award from FeTNA, Lifetime Achievement Award from Canadian Tamil Information Centre, Public Service Award from ATMA and more."

**தமது அளப்பரிய மருத்துவ சமூகப் பணிக்காக தமிழினத்துக்கு பெருமை சேர்த்துள்ள டாக்டர் இந்திரகிருஷ்ணன் மேலும் பல பணிகளைத் தொடரவும், கௌரவங்களைப் பெறவும் கனடா 'தமிழர் தகவல்' குடும்பம் வாழ்த்துகிறது.**




வானிலை
கணிக்கக்கூடியது
ஆனால்
உங்கள் எதிர்காலம்
அப்படியல்ல
எங்கள் நோக்கம்
உங்கள்
எதிர்காலத்தை
பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
SUPER VISAS
RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800
ajithinsurance.ca
ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4


MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
2901 Markham Rd Scarborough, ON M1X 0B6
(Markham and McNicoll Intersection)
MORE DOCTORS, MORE CARE
MMUCC now has more doctors to serve you. Unit 11 has expanded to Unit 6 as well.
The number of doctors working in the Walk-In Clinic / Urgent Care have increased to seven (07) recently.
We will continue to open all 365 days a year. Patients Walk-In without appointment can self-register at the clinic.
The existing online booking from 12am for the same day appointment, will continue for both unit clinics as before @ medcentrehealth.com
Visit us today and experience the convenience & excellence of MEDCENTRE HEALTH
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
Walk-In Clinic (வோக் இன் கிளினிக்) மற்றும் Urgent Care (துரித மருத்துவ சேவை).
இதுவரை காலமும் Unit 11 ல் ( யுனிட் இலக்கம் 11ல்) மட்டும் இடம்பெற்று வந்த மருத்துவ சேவைகள், இப்போது Unit 6 & 11 ( யுனிட் 11 உடன் 6 ம் யுனிட்டுமாக இரண்டு யுனிட்டிகளுக்கும்) விரிவாக்கப்பட்டுள்ளது.
இந்த கிளினிக்குகளில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையும் ஏழாக (7) அதிகரிக்கப்பட்டுள்ளது.
வழமைபோல ஒன்லைன் (online) வழியாக முற்கூட்டியே பதிவு (Book) செய்யலாம்.
அல்லது நேரடியாக வருகை தர முடியும்.
+1 416-609-3333
medcentrehealth.com



வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.
MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
Even if the accident is your fault:
Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist
WE ARE HERE TO
HELP YOU
இலவச ஆலோசனைகளுக்கு:
தீபன்
24 Hours Direct Line
(416) 831-4444
(416) 505-9804
2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6

Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

***• Vistation • Funeral & Memorial Service***
***• Reception • Burial • Cremation***

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை







**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**


- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


AGA
Beauty Skin SPA
&
Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham
On L3S0B5
Body & Face
Cream
On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7,
Scarbarough, On M1K2S2


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S
CHOICE
We build 10,000sq. feet (minimum)
warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour
Wind resistance.
Termite Proof
Compare traditional Building
Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்ததாக
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு
கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# KEV TAX

KNOWLEDGE & EXPERIENCE IS VITAL

www.kevtax.com



- CORPORATE INCOME TAX
- BOOKKEEPING & ACCOUNTING SERVICES
- PERSONAL INCOME TAXES
- QUALITY SERVICE WITH REASONABLE FEES
- FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
- CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION

SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE

FREE EFILE SERVICE

Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)

TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com



List your property with me...

To Book Your Pre Construction Homes & Condo

FREE - Home Evaluation
FREE - Home Staging
FREE - Professional Photography
FREE - Social Media Marketing

HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.

HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977



CALL YOUR PROFESSIONAL SERVICE

Rave
P. Raveenthiran
Broker

Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com




Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


முருகன் புத்தகசாலை
MURUGAN
BOOK STORE
K. Makesan
Manager
5215 Finch Ave E #109, Scarborough ON
mahesan.ka@gmail.com
416 321 0285


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
Singapore Jewellery
Finest Quality 22K Gold
Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream

# Immigration surge fuels Male population boom in Canada

An influx of new immigrants is shifting Canada's gender ratio, as a higher share of male newcomers helps squeeze the female majority to its smallest margin in decades.

The population of adult men grew 3.4 per cent over the past year, while women rose 2.9 per cent, making the spread between the growth of the two groups the widest in nearly 50 years of records, according to an analysis by Doug Porter, chief economist at Bank of Montreal.

The gap is even larger in the 25-to-44 age group, in which men have seen a 4.8 per cent jump and women a 3.9 per cent increase. There are 141,000 more men than women in this age bracket as of January, compared with a long-run average difference of zero.

"What we've seen in the last 10 years is that the growth rate in the male population has steadily been rising faster than the female population in that age group. It seems to be something a little bit more permanent," Porter said in an interview.

The figures highlight the country's changing demographic trends due to its liberal immigration policy, which aims to rapidly expand the pool of workers to stave long-term economic decline from an aging populace.

Canada's population growth accelerated to 3.2 per cent over a one-year period to Oct. 1, faster than any Group of Seven nation, China or India. Almost all of the increase was driven by a surge in international migration, especially among foreign students and temporary workers.

From the late 1970s to around the early 2010s, Canada's population increasingly skewed female, but the trend has been reversing over the past decade as the male cohort grew faster. In 2022, the gap between men and women was at its narrowest in more than 30 years.

Globally, advanced economies with older populations tend to have more women because they generally live longer. Countries with a higher share of young people, on the other hand, tend to skew male, while government policies can amplify that disparity. Large migrant worker populations have also led to wide sex imbalances in Qatar and the United Arab Emirates.

"The issue is less economic in the short term than it is social and economic in the long term,"

said Armine Yalnizyan, a labour economist and a research fellow at the Atkinson Foundation, an equality-focused charitable group.

"Because it means that we are putting the premium on dealing with labour shortages and economic needs and forgetting that we are humans who need to form families, who get sick, who get old."

---

# Canada's Family Doctor Shortage

## 10 million will soon lack access to primary care

According to a national survey, 6.5 million people in Canada, more than one in five, don't have a family doctor or nurse practitioner they can see regularly. Sixty per cent of those who do can't get a same-day or next-day appointment for a sprained ankle, urinary tract infection or other "minor" health problem. While the supply of doctors in Canada grew two per cent in 2022 compared with 2021, the increase was just 1.6 per cent for family medicine doctors, versus 2.5 per cent for specialists, according to the Canadian Institute for Health Information.

In Ontario, more than 2.2 million people are currently without a family doctor. Another 1.7 million are looked after by a doctor who is 65 or older. The Ontario College of Family Physicians predicts more than four million Ontarians will be without a family doctor by 2026, as more doctors narrow their scope or leave their practice entirely, and fewer young medical school graduates choose to opt in. The number of grads choosing family medicine is the lowest it has been in 15 years.



த. சிவபாலு

# ஒன்றாறியோ வகுப்பறைகளில் கற்பித்தல் திட்டங்கள்

ஒன்றாறியோ அரசாங்கம் 2023-24 கல்வி ஆண்டுக்கான கல்விச் சபைகளுக்கான பாடத்திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அறிக்கையினை வெளியீடு செய்துள்ளது. அதன்படி புதிய கல்விக் கொள்கையைப் பின்பற்ற திட்டமிடுதல் என்பதே ஒன்றாறியோ கல்வி அமைச்சரின் பிரகடனமாக அமைந்துள்ளது. அடிப்படைக் கல்விக்குத் திட்டமிடும்படியும் ஆசிரியர்களின் தொழில்முறை தராதரங்கள் பற்றி பகிரங்கமாக அறிக்கையிடும்படியும் கல்விச் சபைகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். அடிப்படைக் கல்விக்கு செல்லும் வண்ணம் பாடசாலைகளை உந்துவதாகவே இக்கொள்கைப் பிரகடனம் காணப்படுகின்றது.

மாகாண அரசு இப்பொழுது மாணவர்களின் சாதனைகளுக்கான முன்னுரிமை கொடுப்பதில் அதிகாரத்தைக் கையில் எடுத்துள்ளது. இதனால் அனைத்து கல்விச்சபைகளையும் மாணவர் பெறுபேற்று அறிக்கைகளைப் பகிரங்கமாக அறிவிப்பதற்கான தேவையை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

முக்கிய கல்வித் திறன்கள் வாசிப்பு, எழுதுதல் மற்றும் கணிதத்தில் கவனம் செலுத்துதல் என்பதே ஒன்றாறியோ கல்வி அமைச்சின் புதிய கொள்கைப் பிரகடனமாகும். “வாழ்க்கையில் வெற்றிபெறத் தேவையான திறன்கள்” என்று அரசாங்கம் அழைக்கும் மாணவர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்துதல்.

மாணவர் ஈடுபாடு மற்றும் ஒழுக்கம், பாதுகாப்பான மற்றும் ஆதரவான கற்றல் சூழலை உறுதி செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தின் முன்னுரிமைகள் தொடர்பான மதிப்பீட்டுத் திட்டங்களையும் கல்விச் சபைகள் தெரிவிக்க வேண்டும். பகிரங்கமாக காட்சிப்படுத்த வேண்டிய புள்ளிவிவரங்களில்:

கல்வித் தரம் மற்றும் பொறுப்புக்கூறல் அலுவலகத்தால் (EQAO) நிர்வகிக்கப்படும் மாகாணத்தின் தரப்படுத்தப்பட்ட சோதனைகளில் தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் சதவீதம்.

கல்வியைப் பூரணப்படுத்தும் விகிதங்கள் மற்றும் புள்ளிகள் ஒன்றுசேர்த்து மொத்தம். வேலை திறன் திட்டங்களில் பங்கேற்கும் மாணவர்களின் சதவீதம். வருகைதராமை, இடைநிறுத்தம் மற்றும் வெளியேற்ற விகிதங்கள். அமைச்சின் இந்த வழிகாட்டல்கள் பற்றி “எங்கள் பள்ளிகளில் என்ன நடக்கிறது என்பது குறித்து வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை, ஏனெனில் உலகின் மிகச் சிறந்த பொதுக் கல்வி முறைகளில் ஒன்றைத்தான் நாம் கொண்டுள்ளோம் என்பதை நாங்கள் அறிவோம்” என்று ஒன்றாறியோ பொதுப் பாடசாலைக் கல்விச் சபையின் தலைவர் கார்த்தி ஆபிரகாம் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றாறியோ கல்விச் சபைகள் ஆசிரியர்களுக்கான தொழிற் பயிற்சி நாள் நடவடிக்கைகள், புதிய விதிகளின்படி மாணவர் வருகை பற்றி அறிக்கை சமரர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளன.

2020ம் ஆண்டு முதல், மாகாண அரசாங்கம் 1 முதல் 8ம் வகுப்புகளுக்கு புதிய கணித பாடத்திட்டத்தையும் புதிய விஞ்ஞானப் பாடத்திட்டத்தையும் உருவாக்கியுள்ளது.

முன்னர் காணப்பட்ட பாரம்பரிய தொடர் எழுத்துமுறையை மீளவும் கொண்டுவரும் திட்டத்தை கல்வி அமைச்சு முன்வைத்துள்ளது. ஒரு தலைமுறையில் காணப்படாத அச்செழுத்து முறையை முதல் முறையாக தொடரெழுத்துப் பயிற்சியை எழுதுவதில் கட்டாய அறிவுறுத்தல் உட்பட, ஆரம்ப மொழி பாடத்திட்டத்தில் திருத்தங்கள் செப்டம்பர் தொடக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் அனைத்து கல்விச் சபைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

தரம் 11ல் வர்த்தக பாட நெறியில் சிறப்புத்திறனைப் பெறுவதற்கான முழுநேர பயிற்சித் திட்டங்களுக்குச் செல்ல மாணவர்களை அனுமதிக்க அரசாங்கம் முனைகின்றது. இதன் மூலம் தொழில் தொடர்பான கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இந்த முயற்சி 13 ஆண்டுகளாக இருந்த கல்வி 12 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டதற்குப் பின்னர் மீண்டும் உயர்கல்வியில் மாணவர்கள் செலவிடும் நேரத்தை குறைத்து அவர்களைக் கல்லூரிகளிற்கு திசைதிருப்பிவிடும் திட்டத்தை கல்வி அமைச்சு முன்வைக்கின்றதா என்ற ஐயமும் பெற்றோரிடம் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

இன்னோர் அம்சமாக மாகாண அரசாங்கம், கல்வியியல் பட்டப்படிப்ப மாணவர்கள் தங்கள் பயிற்சியை முடிக்கும்முன் பதிலீட்டு ஆசிரியர்களாக பணிபுரிய அனுமதிக்கும் வகையில் மாற்றங்களைச் செய்துள்ளது. இது ஒன்றாறியோவின் முந்தைய விதிகளில் இருந்து மாற்றப்பட்ட ஒன்றாகும், முந்தைய திட்டத்தில் பயிற்சியில் ஈடுபடும் ஆசிரியர்கள் வகுப்பறையில் தகுதியான ஆசிரியரின் நேரடி மேற்பார்வையில் மட்டுமே இருக்க முடியும். ஆனால் இத்திட்டத்தின் கீழ் கல்வியில் பட்டப்படிப்பையும் அதற்கான பயிற்சியையும் முடிக்காத நிலையிலும் வளர்முக நாடுகள் போன்று இந்தப் பயிற்சி மாணவர்கள் நேரடியகாகவே வகுப்பறைக் கற்பித்தல் முறைமைக்கு உள்வாங்கப்படுகின்றார்கள். இது ஒன்றாறியோவின் கல்வித் தரத்தைக் குறைத்துவிடும் என்னும் கருத்தை கல்வியியலாளர்களும், ஆசிரிய தொழிற்சங்கத்தினரும் சுட்டிக்காட்டியிருப்பது கருத்திற்கொள்ளற்பாலது.

ஆசிரியர்கள் பணியில் ஈடுபடும்போதே ‘தொழில்சார் விருத்தி’ அவர்களின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது. ஆனால் அந்த பயிற்சிக்காலத்தை மாணவர்கள் வருகைதராத நாட்களாக்கி ஆசிரியர்கள் மட்டும் வருகைதந்து ‘தொழில்முறை விருத்திக்கான’ செயற்பாடுகளில் ஈடுபடுவதையே குறிக்கின்றது ஆனால் இவ்விதம் ஆண்டுக்கு 7 நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்த நிலைமை 4 நாட்களாக்கப்பட்டுள்ளது. மீதமான 3 நாட்களை கல்வியறிவு, கணிதம், பாடத்திட்ட அமுலாக்கம் மற்றும் மாணவர் உள்ளிட்ட மாகாணத்தின் கல்வி முன்னுரிமைகளில் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என அமைச்சு தெரிவித்துள்ளது.

( 30ம் பக்கம் வருக )

**Srisakthi Jewellery**

3351 Markham Road, Suite 131
Toronto, ON. M1X 0A6
(Markham & Steels - Red Building)
Srisakthijewellery1@gmail.com
B: 416 755 0559 C: 416 625 6677




**A1 Studio At GTA Square**

Rudy Ruthran

GTA Square, 5215 Finch Ave East,
#103, Toronto, M1S 0C2.

rudyruthran@gmail.com
Tel: 416-587-5583



**NATHAN SRITHARAN**
Barrister & Solicitor, Notary Public

305 Milner Ave.
Suite #309
Toronto, Ontario
M1B 3V4
(Milner / Markham)

Tel: 416-499-2760
Fax: 416-499-6534
E-mail: sritharan@nathanlaw.ca

**Real estate excellence, every time.**

**Rajmogan Selliah**
Sales Representative

Direct: **416 569 3200**
Email: srajmogan@gmail.com

**Buy | Sell | Lease | Invest**

210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5
Office: 416 284 5555

Residential, Commercial and Investment Properties



# மோசமான விடைபெறுதல்...

'அலிஸ், இப்படியா நீ விடை கொடுப்பது?'

'நான் உண்மையை சொல்கிறேன். எனக்கு நீ கடிதம் எழுதவே வேண்டாம்.'

'ஓ, அப்படிச் சொல்லாதே!'

'இதோ உன்னுடைய மோதிரம். எனக்கு இது வேண்டாம்.'

என் நெற்றியில் பள்ளம் உண்டாகும்படி அதை வீசி எறிந்தாள். நான் வட ஆபிரிக்காவுக்கு போய்ச் சேரும் வரை அந்த அடையாளம் நெற்றியில் மறையவே இல்லை.

ரயில் புறப்பட்டபோது நான் மறுபடியும் மன்றாடினேன். 'அலிஸ், தயவுசெய்.' அவள் அசையாமல் நின்றாள். 'போய் வா.'

'ஓகே, ஓகே அலிஸ் நான் எழுதுகிறேன்.' ரயில் சத்தத்தை மீறிக் கூவினேன். 'நிச்சயம் எனக்கு யாராவது சில தாள்களும் ஒரு பேனையும் கடன் கொடுப்பார்கள்.'

'உன் புஜத்தில் ஒரு துப்பாக்கி குண்டு பாயட்டும். அப்பொழுது உனக்கு எழுதவேண்டிய அவசியமே இராது.' இப்படிச் சொன்னவாறே அவள் சட்டென்று திரும்பி நடந்தாள். நான் மறுபடியும் அவளை என் வாழ்நாளில் பார்க்கவே இல்லை.

கடைசியில் நான் சொன்னது அத்தனையும் உண்மையானது. யுத்தமுனையில் போராடியவர்களுக்கு எழுதுவதற்கு நேரம் கிடைக்கவில்லை. அவர்கள் கொண்டுவந்த பேப்பரும் கசங்கி சுருண்டுபோய் விட்டது. பேனை ஒன்றை கண்ணாலே காணவே முடியாது. அவை திருட்டுப் போய்க்கொண்டே இருந்தன. தபால் தலைபற்றி சொல்லவே தேவையில்லை.

தனிமையான ஓர் இரவில் நான் ஒரு கையால் ரோர்ச் வெளிச்சத்தை அடித்தபடி மறுகையால் அலிசுக்கு கடிதம் எழுதினேன். அது பெரிய துயரகரமான சம்பவத்தை விளைவித்தது. ரோர்ச் வெளிச்சம் ஜேர்மன் படையினருக்கு எங்கள் ரகஸ்ய இருப்பிடத்தை காட்டிக் கொடுத்துவிட்டது. என்னுடைய படைத் தலைவரும், நான் யாருடைய பையிலிருந்து பேப்பரை திருடினேனோ அவரும் துப்பாக்கி சூட்டில் இறந்து போயினர். எனக்கு புஜத்தில் குண்டுக் காயம் பட்டு துப்பாக்கி தூக்குவது இயலாத காரியம் ஆகிவிட்டது. பேனையை தூக்குவது பற்றி பேசவே வேண்டாம்.

# ஒன்ராறியோ வகுப்பறைகளில்...

அதாவது இந்த மூன்று தொழில் விருத்தி நாட்களில் எழுத்தறிவு, கணிதம், பாடவிதான நடைமுறைப்படுத்தல் என்பனவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று கல்வி அமைச்சு பணித்துள்ளது. கல்வி விருத்திக்கான ஆசிரியர்களின் தொழில்சார் விருத்திச் செயற்பாட்டை இக்குறைப்பு பாதிக்கும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

இது மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் ஆசிரியர்களுக்கான தொழில் விருத்தி அல்லது கற்பிக்கும்போதே பயிற்சி என்பன முக்கியமானைவை என்பன தட்டிக்கழிக்கப்பட்டு மாணவர்களின் வரவை மூன்று நாட்களால் அதிகரிக்க உள்ளதாக அமைச்சுத் தெரிவித்துப் பெற்றோரின் மனதில் இடம்பெற கல்வி அமைச்சர் முனைகின்றாரா என்ற கேள்வியும் எழுகின்றது.

நாட்களை அதிகரிப்பதன் மூலம் தரமான கல்வி கிடைக்குமா அல்லது தகமைமிக்கக் கல்வி வளங்கப்படுவதால் கிடைக்குமா என்பது சிந்திக்கத்தக்கது. கல்சிச் சீர்திருத்தம் என்ற போர்வையில் கல்விக்கான செலவினத்தை எந்தெந்தவழிகளில் வெட்டலாம் என அரசு தீவிரமாக ஆலோசித்துச் செயற்படுவதாக கருதவும் இடமுண்டு.





ALL YOUR CATERING NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke, ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave, Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd, Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com


EENC.ca
Employment and Education Network Canada Inc.
TORONTO STAR READERS' CHOICE 2023 DIAMOND WINNER
TORONTO STAR READERS' CHOICE 2022 DIAMOND WINNER
the mirror scarborough READERS' CHOICE 2021 GOLD WINNER
"Together, we will achieve your dream career."
success story achievement strategy analysis inspiration motivation
FREE Webinars and Workshops
To register, contact:
I am writing this with great satisfaction and gratitude for the services I have received from EENC.
After I successfully completed my Business Administrator Diploma at a community college in Canada, I had great difficulty in securing a job in the field of my career. I had applied to numerous positions via job sites, job boards and digital media without any success. In addition, I registered with community and private employment agencies seeking assistance to secure a job without any success. As I saw no progress in reaching my goals, I became anxious and frustrated as the time to pay my loans was fast approaching. One of my relatives told me about EENC and I approached them for help.
The counselors at EENC were very kind and helpful in comforting and guiding me. I not only learned all the necessary skills I needed to secure a job, I also got encouragement and support to overcome the depression I was going through because of my failure at every attempt to secure a job. Especially the one-to-one mentoring support from the employment professionals helped me very much.
I have to admit that the best decision I made was to go to EENC. I learned everything I needed not only to secure a job, but also on how I could successfully grow within the company. I have learned work ethics and how to handle workplace conflicts. The knowledge I have gained has given me so much confidence to prosper in my career.
EENC has proved to me that they really care for people. They never gave up on me, but provided me with consistent support, motivation and encouragement with patience and kindness. The genuine care and service I received from them has changed my attitude; given me confidence and helped me achieve my dream of securing my first job.
Overall, I had a great experience with EENC which has changed my life and I am very grateful!
Thank you EENC for your exceptional services!!!
-Krish
HOW TO WRITE A RESUME
MS EXCEL Beginners Workshop
SOFT SKILLS
Thesa Theiventhiran, Founder & CEO
C: 647-401-8474, O: 416-224-5020 E: 203
www.EENC.ca
HIRED

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட


அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், ‘இம்பிளான்ற்’ சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# தோள்மூட்டு, புஜம், கைகளில் ஏற்படும் வலி உளைவு

அழுதுவிடுவாள் போலிருந்தது. சில இரவுகளில் ஒழுங்கான தூக்கம் இல்லாததால் கண்கள் கரு வளையம் சூழ்ந்திருந்தன. முகம் சோர்ந்தது மாத்திரமின்றிப் பூசணிப்பழம்போல ஊதியும் கிடந்தது.

சோர்வுக்குக் காரணம் மனத்துயரம் அல்ல என்பது அவள் பேசத் தொடங்கியதும் புரிந்தது.

தாங்க முடியாத வலி. முதுகின் சீப்புப் பகுதியில். உளைவா வலியா என்று பிரித்தறிய முடியாத வேதனை. அங்கிருந்த வலி மேலும் நகர்ந்து இடது கை முழுவதும் பரவி உளைந்து கொண்டிருந்தது. நான் துருவித் துருவிக் கேட்ட போது அக் கை நுனியில் சற்று விறைத்து மரத்திருப்பதும் தெரியவந்தது.

ஓரிரு மாதங்களாக வலி இருக்கிறதாம். உளைவா, எரிவா, வலியா என்று பிரித்துச் சொல்ல முடியாத ஏதோவொரு கடுமையான வேதனை. ஆரம்பத்தில் ஓரளவாக இருந்தது, வர வர அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கை வைத்தியம், நாட்டு வைத்தியம் எதுவும் சுகம் கொடுக்கவில்லை. அருகிலிருந்த மருத்துவரிடம் காட்டியபோது தசைப்பிடிப்பாக இருக்கும் எனச் சொல்லி அவ்விடத்தில் ஊசி ஏற்றியிருக்கிறார். ஆயினும் அந்த ஊசியிலும் எந்தச் சுகமுமில்லை.

அனுபவப்பட்ட மருத்துவர்களுக்கு அத்தகைய வலிக்கான காரணம் வலிக்கும் அதே இடத்தில் இல்லை. வேறு இடத்திலிள்ள நோய்க்கான வலி இங்கு பிரதிபலிக்கிறது என்பது தெரிந்திருக்கும். பெரும்பாலும் கழுத்து எலும்புடன் சேர்ந்த Cervical spondylosis என ஊகிப்பதில் பிரச்சனை இருக்காது. நிச்சயப்படுத்த பரிசோதனைகள் தேவைப்படும்.

நோய் ஓரிடத்தில் இருக்க வலி வேறு ஒரு இடத்தில் பிரதிபலிப்பதை தொலைவிட வலி (Referred Pain) என்பார்கள். இதனைக் கழுத்து எலும்புத் தேய்வு நோய் என்று சொல்லலாம். வயதாகும்போது ஏனைய எலும்பு-களில் தேய்மானம் ஏற்படுவதுபோலவே கழுத்தின் முள்ளெலும்பிலும் ஏற்படுவதுண்டு. 40 வயதிற்கு மேல் இத்தகைய பிரச்சனை ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகமாகும்.

பொதுவாக வலி தொடர்ச்சியாக இருப்பதில்லை. விட்டுவிட்டு வரும்.

அத்துடன் கழுத்துத் தசைகள் இறுக்கமாகவும் இருக்கும்.

கழுத்து எலும்புகள் ஏனைய முதுகெலும்புகள் போலவே ஒன்றென்மேல் ஒன்றாக அடுக்கபட்டிருக்கினறன. அவை தம்மிடையேயான அசைவாட்டத்திற்காக வட்டுகள் எனப்படும் Intervertebral disc இனால் இணைக்கப்பட்டுள்ளன. முள்ளெலும்புகள் தேய்வதாலும், தேய்ந்த எலும்புகள் இடையேயுள்ள வட்டுகளை அழுத்துவதாலும், சிறு எலும்புத் துணிக்கைகள் வளர்வதாலும், முண்ணான், அதிலிருந்து வெளியேறும் நரம்புகள் அழுத்தப்படுதாலும்தான் வலி, வேதனை நரம்புப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

ஆனால் இது மோசமாகி, அவற்றிடையே உள்ள இடைவெளி சுருங்கி அதனூடாக வெளிவரும் நரம்புகளை அழுத்துவதால் வலி ஆதிகமாகும். இதன் அறிகுறிகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.கழுத்தில் வலியும், அதன் தசைகளில் இறுக்கமும் பிடிப்பும்.

இவ் வலியானது தோள் மூட்டு, புஜம், நெஞ்சு போன்ற இடங்களுக்குப் பரவக் கூடும். புஜங்கள், கை, கால்கள், பாதம் போன்ற இடங்களில் ஊசியால் குத்துவது போன்ற வலி, உளைவு, எரிவு போன்ற அறிகுறிகள் தோன்றலாம்.

கைகள், விரல்கள், பாதம் போன்ற இடங்கள் மரத்தது போன்ற உணர்வு ஏற்படலாம். சிலவேளை அங்குள்ள தசைகள் பலமிழப்பதுமுண்டு. விரல்களால் பற்றுவது சிரமமாக இருக்கலாம்.

நடப்பதில் சிரமம் ஏற்படக் கூடும். நிலைதளரக் கூடும். மலம், சிறுநீர் கழிப்பதில் உள்ள கட்டுப்பாடு குறைந்து, தன்னுணர்வின்றி அவை வெளியேறக் கூடும். இது சற்றுத் தீவிரமான நிலையில் தோன்றும்.

ஆரம்ப நிலையில் கழுத்தினது அசைவு, வலியுள்ள இடங்கள் ஆகியவற்றைப் பரிசோதிப்பதுடன், நரம்புப் பாதிப்புகள் இருக்கிறதா என மருத்துவர் உடற்பரிசோதனை செய்வதுடன் நோயைக் கண்டறிவார்.

X Ray பரிசேதனை செய்வதன் மூலம் கழுத்து எலும்புகளின் நிலை பற்றி அறிந்து கொள்ள முடியும். தேவை ஏற்படின் CT scan, MRI போன்ற பரிசோதனைகள் செய்வார்.

நரம்புகள் எந்தளவு வேகமாகவும், திறமையாகவும் செயலாற்றுகின்றன என அறிய Nerve conduction study பரிசோதனையும் உதவலாம். சாதாரண வலிகளுக்கு சுடுநீர் ஒத்தடம் கொடுப்பது, வலி நிவாரணி ஜெல் பூசுதல், தசைகளைப் பிடித்துவிடுதல், மெதுமையான மசாஜ் போன்றவை உதவும்.

சற்றுக் கடுமையான வலியெனில் வலிநிவாரணி மாத்திரைகள் தேவைப்படும்.

கழுத்திற்கு கொலர் (Cervical Collar) அணிவது உதவும். கடுமையெனில் சத்திரசிகிச்சையும் தேவைப்படலாம்

தலையக் குனிந்து செய்யும் வேலைகளைக் குறையுங்கள். புத்தகம் படிப்பது, சமையல் வேலை போன்றவற்றின்போது கவனம் எடுக்கவும்.

குறைந்த தடிப்பமுள்ள தலையணையை மாத்திரம் உபயோகியுங்கள்.

கழுத்தை ஒரே பக்கமாக நீண்ட நேரம் திருப்பி வைத்திருப்பதைத் தவிருங்கள்.

நடுவில் பள்ளமுள்ள விசேட தலையணைகள் நல்லது. முகம் குப்புறப்படுக்க வேண்டாம். தலையில் பாரங்கள் சுமக்க வேண்டாம்.


OIL CHANGE SPECIAL $34.95
Semi-Synthetic Oil Change includes:
+ Tax & Disposal Fees
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

